Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 13 29-08-94 திங்கட்கிழமை ஓசை 192

### பாண், மாவின் விலை குறைப்பு

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் வாக்குறுதிக்கமைய 450 கிராம் நிறையுள்ள பாணின் விலை நேற்று நள்ளிரவு முதல் ரூபா 3-50ஆக குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக வாணிப உணவுத்துறை அமைச்சர்கிங்ஸ்லி டி. விக்கிரமரட்ண அறிவித்துள்ளார். இதன்படி மாவின் விலையும் குறைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு கிலோ மா ரூ. 6.65 க்கு விநியோகிக்கப்படும். மாவின் தற்போதைய விலை 11 ரூபா வாகும். பேக்கரி மற்றும் வர்த்தகர்களுக்கான மொத்த விலை ஒரு கிலோவுக்கு ஏழு ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. முன்னைய விலை ரூபா11.35 ஆகும். பிரதமர் சந்திரிகா விடுத்த பணிப்புரைக்கமைய திறை (6ஆம் பக்கம் பார்க்க)

# நாளை மறுதினம் அமைச்சரவை கூட்டத்தில் பொருளாதாரத்தடை நீக்கம்பற்றி ஆராய்வு!

## சிசிலின் ரகசிய கொழும்பு விஜயம்; உயர்மட்டத்தில் ஆராய்வு

### சந்திப்புக்கள் குறித்தும் விசாரணை

(கொழும்பு)

தேர்தல் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்பாக முன்னாள் இராணுவ தளபதியும், தற்போது தாய்லாந்து தூதுவராக கடமையாற்றுபவரான ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா கொழும்புக்கு திடீர் விஜயம் மேற்கொண்டமை தொடர்பாக அரசாங்க உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது-

சிசில் வைத்தியரட்ணாவின் இவ் விஜயம் உத்தியோக பூர்வமானதா என்பது குறித்தும் இவரை யார்? ஏன்? அழைத்தார்கள் என்பது பற்றியும், ஆராயப்பட்டு வருகிறது, மேலும் அவர் தனிப்பட்ட முறையில் வந்திருந்தால் அவரது விஜயம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தமையின் காரணம் குறித்தும் ஆராயப்படுகிறது.

ஆகஸ்ட் 12ஆம் திகதியன்று கொழும்புக்கு வந்த சிசில் வைத்தியரட்ணா 15ஆம் திகதியே மீண்டும் திரும்பிச் (6ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை - ஒலுவிலில் புதிய துறைமுகம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் ஒலுவில் கடற்பகுதியில், புதிய துறைமுகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை துறைமுகம், கப்பல் போக்குவரத்து மற்றும் புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சு மேற்கொண்டுள்ளது. துறைமுக கப்பல் துறை அமைச்சின் பொறியியலாளர்கள் புதிய துறைமுகம் அமைப்பதற்கான பூர் (6ஆம் பக்கம் பார்க்க)

## தடைநீக்கம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் தேவையற்றது என்கிறார் அனுருத்த ரத்வத்த

(கொழும்பு)

வடபகுதி மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்குவது குறித்து நாளை மறு தினம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப் படவுள்ளது.

இதே சமயம், வட பகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு வர்த்தமானி அறிவித்தல் அவசியம் இல்லை எனவும், முப்படைத் தளபதிகள் மற்றும், பொலிஸ் மா அதிபர் மூலம் இதனை நீக்குவது சிறப்பானதாகுமென பிரதிப் பாதுகாப்புஅமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட பாதுகாப்பு பிரதி அமைச்சர், பொருளாதார தடைநீக்கம் குறித்து அறிவுறுத்தல் களை இன்னும் சில தினங்களில் வெளியிட முடியும் என தாம் எதிர்பார்ப்பதாக கூறியுள்ளார்.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொருளாதாரத்தடையை நீக்க தாம் விரும்பவில்லை, எனவும் முட்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் மூலம் பொருளாதாரத் தடையினை நீக்குவதே சிறந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் யுத்தத்திற்கு ஓர் அரசியல் தீர்வைக் காண்பதே எமது குறிக்கோள் இதனை நிறைவேற்றுவதன் ஓர் அங்கமாக பொருளாதாரத் தடையை நீக்க எமது அரசாங்கம் திட்டமிட்டுள்ளது இன்னும் சில தினங்களில் இதற்கான அறிவித்தலை வெளியிட முடியும் என நான்எதிர்பார்க்கிறேன்.

பொருளாதாரத் தடையினால் எதுவித நன்மையும் ஏற்படவில்லை மாறாக வடபகுதி மக்கள் துன்பங்களை அனுபவித்ததுடன் தென்பகுதி அரசாங்கம் மீது சந்தேகக் கண் கொண்டுபார்க்க வேண்டிய நிலையையே ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்த விரிவான பேச்சுவார்த்தைகள் முப்ப (6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. அரசு செய்த5000 கோடி ரூபா வெளிநாட்டு ஒப்பந்தம் இடைநிறுத்தம்

## பொருளாதாரத் தடைநீக்கம்; இன்னும் இழுபறி நிலை தீரவில்லை

காணங்களில் நடைபெறும் ... பொருளாதாரத் தடையி ...

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. அரசு செய்த 5000 கோடி ரூபா வெளிநாட்டு ஒப்பந்தம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் செய்து கொண்ட சுமார் 5000 கோடி ரூபா பெறுமதியான ஒப்பந்தங்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாக தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க கூறியுள்ளார்.

இவ் ஒப்பந்தங்கள் மூலம் அரசின் கஜானா கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும்; இந்த ஒப்பந்தங்களின் மூலமான பொருளாதாரப் பாதிப்புகளை ஆராயும் வகையில் இவ்ஒப்பந்தங்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்குள் ரஷ்ய அரசிடமிருந்து 360 கோடி ரூபாவுக்கு ஆயுதம் வாங்குவதற்கு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமும் உள்ளடங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. முப்படைத் தளபதிகளுக்கும், தெரியாமல் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி, பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் பல மோசடிகள் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் காலத்தில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட இருந்த இவ் ஆயுத தளபாடங்களுக்கான பணம் வெளிநாட்டு கடன் ஒன்றின் மூலம் பெறப்பட இருந்தது. மேலும் கொள்வனவு செய்யப்பட இருந்த இராணுவத் தளபாடங்களுக்கு உதிரிப்பாகங்கள் பெறமுடியாது எனத் தெரிந்தும் இவ் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது குறித்துஇராணுவ கொள்கை வகுப்பாளர்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

# காலியான நிலையில் திறைசேரி; ஒப்பந்தங்கள் நிறைவேற்றபணமில்லை

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் திறைசேரி காலியாக இருப்பதாகவும், இதனால் புதிதாகப் பதவி ஏற்றுள்ள அரசாங்கம் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதாகவும் பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

ஒருபுறம் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு பெரும் தொகைப் பணம் அரசிற்குத் தேவையாக இருக்கின்றபோது வெளிநாட்டு நிறுவனங்களுடன்பழைய அரசு செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்குப் பெரும் தொகைப் பணம் தேவையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் வெளிநாட்டு நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் எதையும் தொடர முடியாத நிலையில் புதிய அரசாங்கம் இருப்பதாகவும், இதனால் புதிய அரசாங்கம் பாரிய சிக்கலை எதிர்நோக்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவி விலகமுன்னர் செய்து கொள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பொருளாதாரத் தடைநீக்கம்; இன்னும் இழுபறி நிலை தீரவில்லை

(கொழும்பு)

பொருளாதாரதடையை நீக்குவது குறித்து தெளிவான நிலைக்கு வரமுடியாத நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் உள்ளதாகவும், தற்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவராக உள்ளபோதும் பாதுகாப்பு அமைச்சராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த டி.பி. விஜேதுங்கா இருப்பதனால் இழுபறி நிலை தோன்றியுள்ளதாகவும் பிரான்ஸ் செய்தி நிறுவன செய்தியாளர் அமால் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இரு கட்சிகளும் இணைந்து அல்லாது ஒரு தீர்மானத்தை எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ள இவ்வேளையில் தம்மிடம் கருத்துவேற்றுமை இல்லை என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார். ஆனால் பின்னணியில் பல பிரச்சினைகள் உள்ளன. இவை பொருளாதாரத்தடை நீக்கம் தொடர்பான பிரச்சினையில் உச்சக்கட்டத்தை அடையும் என நாம் எதிர்பார்க்க முடியும் என அமால் ஜயசிங்க தெரிவித்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு உற்பத்திகளும் தெற்கிற்கு வரவேண்டும்

(கொழும்பு)

தெற்கில் இருந்து பொருள்கள் வடக்கே செல்வதுடன் பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதாக கருதமுடியாது. வடக்கின் உற்பத்திப்பொருள்கள் தெற்கே வருவதன் மூலம் அவர்களின் பொருளாதார வளம் பெருகவேண்டும் என்பதே எனது எண்ணம். என சிறிலங்கா பிரதமர் சந்திகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# பொருளாதார நல் உறவு இந்தியாவுடன் பேணப்படும்

### ராவின் தூதுவரிடம் சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுடனான பொருளாதார உறவை விரிவுபடுத்த தமது அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாக பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் சிறப்புத் தூதுவர் ஏ. என். வர்மா பிரதமர் சந்திரிகாவை சந்தித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்தியப் பிரதமர் அனுப்பியிருந்த செய்தியையும் வர்மா சந்திரிகாவிடம் ஒப்படைத்தார்.

இச் சந்திப்பு இரண்டரை மணி நேரம் நீடித்தது. இருதரப்பு கூட்டுறவுக்கு ஊக்கமளிப்பதற்காக இந்திய - இலங்கை கூட்டு குழுவின் கீழ் உள்ள மூன்று துணைக் குழுக்களின் நடவடிக்கைகளை துரிதப்படுத்த விரும்புவதாக பிரதமர் சந்திரிகா குறிப்பிட்டார்.

# யுத்தத்தை வியாபாரமாக்கியமை குறுகிய விசாரணையில் தெளிவாகியது

### சிறிலங்கா பிரதமர் சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தை பலர் வியாபாரமாக பயன்படுத்தி வந்துள்ளமை மிக குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

360 கோடி ரூபா ரஷ்ய ஆயுத கொள்வனவை இடைநிறுத்தி விட்டு நேற்று மாலை நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே இக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இவ் ஆயுத கொள்வனவில் பத்து சதவிகித பணம் மட்டுமே வழங்கப்பட்டு விட்டதாகவும் ஆனால் ஆயுத தளபாடங்கள் அவசர அவசரமாக கொழும்பிற்கு கொண்டு வரப்பட்டதாலேயே தனக்கு சந்தேகம் எழுந்துள்ளதாகவும் பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் இவ் ஒப்பந்தத்தில் தவணை அடிப்படையில் கூட கொடுக்கல் வாங்கல் செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக பூர்வாங்க விசாரணையொன்று மேற் கொள்ளப்படுவதுடன் ஊழல் புரிந்தவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

# வெளிநாட்டமைச்சின் ஆலோசகராக கொரயா

வெளிநாட்டு அமைச்சின் ஊதியம் பெறாத சிரேஷ்ட ஆலோசகராக கலாநிதி காமினி கொரயா கடமையாற்ற இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

கலாநிதி காமினி கொரயா வுக்கு வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகராக கடமையாற்ற தான் விடுத்த அழைப்பை இவர் ஏற்றுக் கொண்டு இப் பதவியை வகிக்க முன்வந்தார் என்றும் ஊதியம் எதுவும் தனக்கு வேண்டாம் என அவர் தம்மிடம்தெரிவித்ததாகவும்மேலும் கூறினார்.

# இன்று படகுச் சேவை

கிளாலி - பூநகரி விசேட படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்குநடைபெறும் எனவும் நாளையும் நாளைமறுதினமும் வழமைபோல் படகுச் சேவை நடைபெறும் எனவும் அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# முஸ்லிம் காங்கிரஸ் உதவிபெற சவூதி மன்னரை டி.பி. நாடினார்

(கொழும்பு)

தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த சமயத்தில்சவூதி மன்னருடன் தொடர்பு கொண்ட ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா முஸ்லிம் காங்கிரசின்ஆதரவை ஐ.தே.கவிற்கு பெற முயற்சி செய்துள்ளார்.

எனினும் சவூதி அரேபிய மன்னர் டி.பியின் வேண்டுகோளை ஏற்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்புடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவில்லை எனவும் கூறப்படுகிறது.

## வரி விளம்பரம்

### வெளிவந்துவிட்டது வியாழன் மாற்றம்

Prof. T. சத்தியதாஸன் கணிப்பில், ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம். இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்து விட்டது. சீவம் நீதிக்கதைகள் 3,4,5,6 ஆண்டு 5 கணிதம் தமிழ் 94 வினா விடைகள் (சி-10101)

### மகாதேவா ஜோதிடம்

வியாழமாற்றம் விற்பனையாகின்றது — 140 செல்லர் வீதி, கல்வியங்காட்டுச்சந்தைச்சருகில் சோதிடரைச் சந்திக்கலாம். (923!)

### பாலர் ஆசிரியராக ......

விரைவில் பயிற்சி க. பொ. த (சா | த) கடைசித் தகைமை சனி, ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம் உயர் கலை கல்லூரி 73, பருத்தித்துறைவீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (9212)

### நேர்முகப் பரீட்சை

தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடன் 'ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி நெறிக்கு பயிலுனர்களை ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை 3-9-94 காலை 9 மணிக்கு வதிரியில் உள்ள வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் நடைபெறும் பயிலுனர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புப்படி ரூபா 450/- வழங்கப்படும். செயலாளர் (9219)

---

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை லிங்கம்

(பாலசுப்பிரமணியம் சந்திரலிங்கம்)

பருத்தித்துறை

பிறப்பு: 29 05-1969

வீரச்சாவு: 29 08-1989

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து விடிவுபெற சாதனை புரிந்து எம்மை விட்டுப் பிரிந்த அருமை மகனே! நீ பிரிந்து ஆண்டு ஐந்தான போதும் தம்பி உன்னை மறக்க முடியாதடா. உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சந்திரலிங்கம் வீதி, பருத்தித்துறை.

பெற்றோர், சகோதரிகள்

(9228)

---

## நினைவு கூருகின்றோம்...

### 29. 08. 1994 ..

1986-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டுநகரில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்டசுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2 ம் லெப். சுந்தரம்** (தம்பிப்பிள்ளை அருள்ராஜா -களுவாஞ்சிக்குடி - மட்டு)

1989-ம் ஆண்டு வல்வெட்டித்துறை-பொலிகண்டி ஏழுபுளியடி வீதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லிங்கம்** (பாலசுப்பிரமணியம் சந்திரலிங்கம் - சந்திரலிங்கம் வீதி - பருத்தித்துறை)

1990-ம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**லெப். பாறூக்** (வெள்ளையன் ஏகாம்பரம் - கோரக் கல்லிமடு, கிரான் - மட்டு)

**கப்டன் பாறூக்** (நாச்சிமுத்து நந்தகுமார்- 7ம் கட்டை, அலம்பில் - மணலாறு)

**யசோ** (ஜோன் றொபின்சன் - பிரதானவீதி, இளவாலை - யாழ்)

1991-ம் ஆண்டு வவுனியா - பாவற்குளம், ஆவரங்கால் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**மேஜர் சுசியாமா** (பரமநாதன் சிதம்பரநாதன்-1ம் படிவம், பாவற்குளம் - வவுனியா)

**லெப். குமார்** (சிவசிதம்பரப்பிள்ளை ஜெயந்தன்- வைரவப்புளியங்குளம் - வவுனியா)

முல்லைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் விழுப்புண்ணடைந்து சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய,

**றோய்** (சொக்கலிங்கம் மதிவதனன் - முல்லைத்தீவு- மணலாறு)

மட்டு - மாவடி ஓடையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ரஞ்சிதன்** (இளையதம்பி கந்தசாமி வாழைச்சேனை -மட்டு)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**முகமது** (விநாயகம் ஜெயபரன் -அரசர்கேணி-பளை)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். விக்ரர்** (குமாரரட்ணம் சுபாஸ்கரன் - வெல்லாவெளி - மட்டு)

**சிறிதரன்** (சூசைப்பிள்ளை நிக்கலஸ் - இருதயபுரம், மூதூர் - திருமலை)

இதேபகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**அஜந்தன் / கோபு** மதியாபரணம் தவகாந்தன்-அரியாலை - யாழ்)

1993-ம் ஆண்டு - பருத்தித்துறைக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினரின் டோறாரக அதிவேக பீரங்கி ரோந்துப்படகை கரும்புலித்தாக்குதல் மூலம் தகர்த்தெறிந்தபோது வீரச்சாவெய்திய கடற்கரும்புலி,

**மேஜர் புகழரசன் புவீந்திரன்**

(சுப்பிரமணியம் நாககீதன் - ஏ. வி. வீதி, அரியாலை- யாழ்)

கடற்கரும்புலி,

**கப்டன் மணியரசன்** (தேவநாயகம் இராசகுமரன் -மணற்காடு - குடத்தனை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் இலங்கை-இந்தியப் படையினராலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்-

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10195

---

## விற்பனை முகவர்கள் தேவை

மாதாந்த இதழ்களை வெளியிடும் பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு நடமாடும் விற்பனை முகவர்கள் தேவை. யாழ். மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலிருந்தும் இதற்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. 19 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள், ஆண்கள் ஆகிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் மேலதிக விபரங்கள் நேரில்

விண்ணப்ப முடிவுத் திகதி:- 1994-09-10

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

விளம்பர இல. 348
மே / பா ஈழநாதம் பணிமனை
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்
(சி-10177)

---

அளவெட்டி - நாகேஸ்வரம்

# ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான ரதோற்சவ

# ஸ்ரீரங்கநாதர் மண்டலாபிசேக சிறப்பிதழ்

## ஸ்ரீ நாகவரத நாராயணா தேவஸ்தான ரதோற்சவ

# ஸ்ரீரங்கநாதர் மண்டலாபிசேக சிறப்பிதழ்

**29-08-1994**

## 'ஸ்ரீரங்கநாதரும், நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணரும்'

அருட்கவி

சி. விநாசித்தம்பி

ஸ்ரீரங்கம் என்ற தலம் வைஷ்ணவ கோவில்களில் மிக முதன்மையானது சிதம்பரத்தை கோவில் என்றழைப்பது போல ஸ்ரீரங்கத்தையும் வைணவர்கள் கோவில் என்ற முதன்மை கொடுத்து அழைப்பர்.

இது காவிரி, கொள்ளிடம் என்னும் நதிகளின் நடுவே அமைந்தது இங்கேயுள்ளமூல மூர்த்திக்கு ஸ்ரீரங்கநாதன் என்று பெயர். ஆதிசேடனில் தெற்கே நோக்கிப் பள்ளி கொள்கிறார். அம்பாளுக்கு ஸ்ரீரங்கநாயகி என்று பெயர்.

தர்மபிர்மா, ரவிதர்மன். சந்திரன், விபீஷணன் முதலானோர் வழிபட்ட தலமாகும். இதனை பூலோக வைகுண்டம் எனவும் அழைப்பர். ஸ்ரீரங்கநாதரைத் தரிசித்த அடியார்கள் சுவாமியின் தங்க விமானத்தையும் தரிசித்து பரவாச தேவரையும் சேவிப்பது வழக்கம்.

ஸ்ரீரங்கநாதரின் தலவரலாற்று நூலில் இருந்து சில பகுதிகளைப் பார்ப்போம்.

ஒருகாலம் விசுவாவசுஎன்ற சந்தர்வன் நதிகளை வழிபட்ட போது "நான்பெரிதோ நீ பெரிதோ" என்று கங்கையும் காவேரியும் வாது கொண்டனர். "எனது பாதத்திலே கங்கை தோன்றியமையால் கங்கையே பெரிது" என்று பிரமன் கூறக்கேட்ட காவேரி பெருந்தவம் செய்தாள்.

திருச்சேறை என்ற இடத்தில் அவள் செய்த தவத்திற்காக யான் காவேரியில் தங்கிப் பெருமையும், சிறப்பும் தருவதாக வரம் கொடுத்துள்ளேன். நீ இலங்கை சென்று அரசு செய். யான் உன்னையும், உன்நாட்டையும் பார்த்த வண்ணம் மேற்கே தலை வைத்து தெற்கு நோக்கி இங்கே பள்ளி கொள்கிறேன்" என்று விபீஷணனுக்கு திருவாய் மலர்ந்தருளினார் ஸ்ரீரங்கநாதர்.

மலர் தயாரிப்பு

**த. பரமலிங்கம்**

இத்தகைய கண்ணனாகிய ஸ்ரீநாகவரத நாராயணப் பெருமான் இன்று (29-8-94) அளவெட்டி நாகேஸ்வரத்தில் தங்கரதமேறி அருட்காட்சி தருகின்றார். அடியார்கள் தரிசித்து நல்லருள் பெறுவார்களாக!

## பிரதம குருவின் ஆசிச்செய்தி

எப்பெருமான் திருவருளால் இறந்த பாலகன் உயிர் பெற்றமை முதலாய பற்பல அற்புதங்களையும் புரிந்து, அடியார்க்கெல்லாம் வேண்டும் வரங்களை கொடுத்து அருள்மழை சொரிந்து வீற்றிருக்கின்றார்.

இவ்வாண்டும் (29-8-94) திங்கட்கிழமை ஸ்ரீ நாகவரத நாராயணமூர்த்தி தேரிலே பவனி வருகின்ற திருக்காட்சியை காணும்பேறு அடியார்களுக்கு கிடைத்துள்ளது.

மெய்யடியார்கள் அனைவரும் திரண்டு வந்து தேர்ப்பவனி கண்டு இஷ்ட சித்திகளைப் பெற்றேகுமாறு ஆசிக்கின்றேன்.

டாக்டர் சிவஸ்ரீ

கி. உருத்திரபுரேஸ்வர சிவாச்சாரியார்

## எங்கள் துயர் தீர்க்க வா!

அன்றுதூ ணிடைவந்து பிரகலா தனன்வேண்ட
அடலிரணி யனை அழித்தாய்
கன்றினால் விளவெறிந் தின்னலை போக்கினாய்
கராஜன் அழைக்க வந்தாய்
இன்றிரு தலைக்கொள்ளி எறும்பா யலைந்திடும்
எங்கள் துயர்தீர்த் திடாயோ
மன்றல்மிகும் அளவைநா கேஸ்வரத்துறை நாக
வரதநா ரண மூர்த்தியே!

--"தெய்வீகக்கவி"


மண்டலாபிஷேகம் நோக்கும்
ஸ்ரீரங்கநாதர் போற்றி! போற்றி!

**பேரரசி வண்ணச் சோலை**
50, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

**வீ. எம். கே. ஜுவல்லர்ஸ்**
கண்டி வீதி, சாவகச்சேரி.

**ஒளி இல்லம்**
(அந்தியகால நண்பன்)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**ராஜா ஸ்ரோர்ஸ்**
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**வசந்தி மின்பொருள் விற்பனை நிலையம்.**
110, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

**ஜெயா அழகு மாடம்**
உதிரி, மொத்த விற்பனை நிலையம்.
177A, 187, மின்சார நிலைய வீதி'
யாழ்ப்பாணம்.

**ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம்**
58, குறுக்கு வீதி, நல்லூர்.

நாகவரதர் தேரோடி
நவவாழ்வு விடிவதாக!!

**திருமாட்டி புடவைக்கடல்**
(சீமாட்டி)
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**லிங்கம் கூல்பார்**
(வெலிங்டன் சந்தி)
52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**விக்னேஸ்**
பல்பொருள் விற்பனை நிலையம்.
45, சந்தோசம் வீதி, யாழ்ப்பாணம்.

**யோகாமணி ஆடையகம்**
32, சந்தோசம் வீதி, (கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

**பி. ஐ. பர்னான்டோ**
மூக்குக் கண்ணாடியகம், பல் கட்டும் நிலையம்
542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**அண்ணா தொழிலகம்**
"ஜீவாகாரம்" தயாரிப்பாளர் இணுவில்

**ஆர். வி. ஜி. மருந்தகம்**
504, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

(கி/10184)

க. பொ. த. உயர்தரப் பரீட்சை - 1994

# அளவையியலும் விஞ்ஞான முறையும் ii

## பரீட்சை வழிகாட்டி:-

அளவையியல் பகுதி IIஇல் மூன்று பிரிவுகளில் 12 வினாக்கள் இடம்பெறுவது வழமை. இவற்றில் ஒவ்வோர் பிரிவில் இருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாணவர் விடையளித்தல் வேண்டும். மேலதிக வினாக்கள் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

அளவையியல் பகுதி I இல் மாணவர் கூடுதலான புள்ளிகளை பெற்றிருந்தும்கூட அதிவிசேட சித்தி பெற முடியாமைக்கு காரணம் பகுதி II இல் பூரண முறையில் விடையளிக்கப்படாமையே. ஆகவே மாணவர் பகுதி II இல் ஒவ்வொரு வினாவையும் நன்கு வாசித்து பூரணவிளக்கத்துடன் தேவையான இடத்து உதாரணங்களைக் காட்டி ஐந்துவினாவுக்குரிய விடையை எழுதிக்கொள்ள வேண்டும்.

இனி பகுதி II இன் மூன்று பிரிவில் இடம் பெறுகின்ற சில வினாக்களையும் விடையளித்தல் முறையையும் நோக்குவோம்.

பகுதி I

இப்பிரிவில் பொதுவாக விஞ்ஞான வரலாறு, விஞ்ஞான வரையறை, விஞ்ஞான முறை, விஞ்ஞான கண்டுபிடிப்பு, விஞ்ஞானம், விஞ்ஞானம் அல்லாதவை, விஞ்ஞானம் பற்றிய முறையியலாளரின் கோட்பாடுகள், விஞ்ஞான வகை போன்றவற்றுடனான வினாக்களும் விஞ்ஞானஆய்வு முறைகளை எளிய நோக்கல், பரிசோதனை நோக்கல், சான்று, கருதுகோள் தொடர்பான விடயம், உய்த்தறி தொகுத்தறி முறை, ஒப்பீட்டு முறை, மில்லின் முறை, அளவீட்டு முறை போன்றவற்றிலும்விஞ்ஞான ஒழுங்கமைப்பு முறைகளான மாதிரி, வரைவிலக்கணம், வகையீடு, பிரிப்பு முறை போன்றவற்றிலும் வினாக்கள் இடம் பெறுவது வழமையாகும். இப்பகுதியிலேயே அதிக வினாக்கள் இடம் பெறும். இவற்றில் மாணவர் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்தல் வேண்டும். ஆக கூடுதலாக மூன்று வினாவையே தெரிவு செய்யலாம்.

இப்பகுதியில் இடம்பெறும் சிலவினாக்கள் பின்வருமாறு:

வினா 1

அ] விஞ்ஞானம், விஞ்ஞான முறை என்பவற்றில்

ஞானங்களில் தூயகணிதம், அளவையியல் என்பன சிந்தனை முறையை அடிப்படையாக கொண்டமைந்தனாவகும். அறிவாராய்ச்சியியலில் நியாயவாதியான டேக்காட் சிந்தனைவாதியாக கருதப்படுகிறார்.

ஆனால் புலன் அனுபவ முறை என்பது தொகுத்தறி ரீதியான முறையாகும். விஞ்ஞானங்களுக்குரிய அனுபவ சோதனைகள் இதில் இடம் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக பௌதிக, உயிரியல் விஞ்ஞானங்கள் புலன் அனுபவ முறையை அடிப்படையாகக் கொண்டன.

அனுபவதாரிகளான டேவிற் கியூம், ஜோன் லொக் போன்றவர்கள் இக்கருத்தினை அனுபவவாதம் அல்லது அனுபவ முதல்வாதம் என முன்வைத்தனர்.

இ) விஞ்ஞானத்தில் கண்டுபிடிப்பு என்பது இயற்கையில் இருந்தவற்றை ஆனால் இதுவரை ஆராயப்படாது இருந்ததை ஆராய்ந்து பெறுவதாகும்.

உதாரணமாக புவியீர்ப்பு விதி பற்றிய கண்டுபிடிப்பைக்கூறலாம்.

ஆனால், புதிது புனைதல் என்பது இலங்கையில் இல்லாத ஒன்றை புதிதாக உற்பத்தி செய்தல் அல்லது அமைத்தல் ஆகும்.

உதாரணமாக நீராவி இயந்திரம் உற்பத்தி செய்யப்பட்டதைக் கூறலாம்.

ஈ) விஞ்ஞான வரலாற்றை நோக்கும்போது எந்த ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பும் பிரச்சினைகளில் இருந்தே பெறப்பட்டன. இங்கு பிரச்சினை என்பது நேர்வுகள் நிகழ்வுகள் பற்றி அவதானிக்கின்றபோது எமது அப்போதைய அறிவுக்கு பொருந்தாதது அல்லது எமது அறிவுக்கு முரணானது அல்லது விளங்காத ஒன்றாகும். இத்தகைய பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இருந்தே விஞ்ஞானக் கண்டுபிடிப்பு பெறப்பட்டது.

உதாரணமாக மேல் எறிந்த பொருள் கீழ்நோக்கி விழுவது ஏன் என்ற பிரச்சினையில் இருந்து பெறப்பட்ட கண்டுபிடிப்பே புவியீர்ப்பு கண்டுபிடிப்பாகும்.

★ (இவைபோன்று ஏனைய வினாக்களுக்கு விடையளிக்கும் முறை இங்குதரப்படுகின்றது. அவற்றை கருத்தில் கொண்டுமாண

பிரச்சினை தீர்க்கப்படுகின்றது என எழுதல் வேண்டும்

★ காரணகாரிய தத்துவத்தை விளக்கி இத்தத்துவம் ஓர்சீர்மை தத்துவ குறைபாட்டை நீக்கி தொகுத்தறிபிரச்சினையை தீர்ப்பதை எழுத வேண்டும்

★ வரைவுள்ள வேறுபாட்டு தத்துவத்தை விளக்கி உண்மையில்தொகுத்தறி முறையின் பிரச்சினையை நடைமுறையுடன்தொடர்புபடுத்தி விளக்குவது இத்தத்துவம் என விளக்க வேண்டும்

வினா 3

அ) தூய விஞ்ஞானங்களுக்கும் பிரயோக விஞ்ஞானங்களுக்கும் இடையிலான வேறுபாடு அருகி வருகின்றன ஆராய்க.

ஆ) விபரிப்பு விஞ்ஞானங்களையும் நியமம்கூறும் விஞ்ஞானங்களையும் வேறுபடுத்தி விளக்குக

இ) காள்பொப்பரின் கோட்பாட்டில் விஞ்ஞானங்களையும் விஞ்ஞான மல்லாததையும் வேறுபடுத்தி விளக்குக.

விடை

அ) இவ்வினாவுக்கு பின்வவரும் விடயங்களை கருத்தில் கொண்டு விடையளிக்குக.

★ தூயவிஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானங்களை உதாரணங்களுடன் விளக்குதல்

★ இங்கு தூய விஞ்ஞானங்களை கொள்கை விஞ்ஞானம் எனவும், பிரயோக விஞ்ஞானங்களை தொழில்நுட்பம் எனவும் விளக்குதல்.

★ இரண்டுக்கும் இடையில் வேறுபாடு அருகி வருவதை பின்வரும் விடயத்துடன் காட்டுதல்.

★ மருத்துவம், உளவியல் போன்றவற்றில் இரு விஞ்ஞான பண்புகளும் உள்ளன.




ஆ)

★ விபரிப்பு விஞ்ஞானம் என்பது அவதானத்துக்குஉட்பட்ட தேர்வுகளை, அவதானத்துக்குட்பட்ட ஆதாரங்களை கொண்டு உள்ளதை உள்ளவாறு விளக்குவன

முறைகளை விளக்குதல்

★ பரிசோதனையின் சிறப்புத் தன்மைகளை காட்டுதல்

★ அவதானத்தின் முக்கியத்துவத்தை உதாரணத்துடன் காட்டி எப்போதும் பரிசோதனை சிறந்தது என கூறிவிடமுடியாது எனவிடையளித்தல்

ஆ)

★ அவதானத்தின்போது எமது புலன்களினால் நோக்கமுடியாத விடயங்களை அறிய கருவிகளின் பயன் பொருத்தமான உதாரணத்தின் மூலம் எழுதுதல் வேண்டும்.

★ பரிசோதனையில் கட்டுப்பாடு மாறுபாடுகள் ஏற்படுத்தி ஆராய கருவிகள் முக்கியம்

★ கருவிகள் பயன்படுவதால் ஆராயும் பரப்பு விரிவடைவதுடன் புலன்களின் ஆற்றல் கூர்மையடைகிறது.

★ அவதான பரிசோதனை முறையில் பெறப்படும் தரவுகளை ஆவணங்களாக பேணபதிவுகள் அவசியம்.

★ எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது சாத்தியமானதல்ல ஆகையால் பதிவுகள் இங்கு முக்கியம்.

★ விஞ்ஞான ஆராய்ச்சிகளை பதிந்து வைத்திருக்க இவை முக்கியம்.

இ) நோக்கலில் ஏற்படும் போலிகள்

1) அல்நோக்கல்

இதனை பொருத்தமான உதாரணங்களுடன் காட்டுக.

2) வழுநோக்கல்

உதாரணம் மூலம் விளக்குதல்

வினா 5

அ) விஞ்ஞானத்தில் கருதுகோள் தற்காலிக விளக்கங்களே ஆராய்க.

ஆ) சிறந்த விஞ்ஞானக் கருதுகோளின் இலட்சணங்களை தருக.

இ) விஞ்ஞானத்தில் தீர்ப்புச் சோதனையின் பங்கை விளக்குக.

ஈ) மில்லின் எச்சமுறையை கூறி விளக்குக.

விடை

இவ்வினாக்களுக்கு பின்வரும் விடயங்களை கருத்தில்

முறைகளில் ஒன்று

★ காரணத் தொகுதியில் எஞ்சியதை காரணம் எனகாட்டுவது

★ குறியீட்டு விளக்கம்

★ நெப்ரியூன் கண்டு பிடிப்பு ஆகன் கண்டு பிடிப்பு போன்றவற்றை உதாரணமாக காட்ட வேண்டும்.

வினா 6

அ) ஒரு இலட்சியப் பரிசோதனையின் இயல்பினை விளக்குக.

ஆ) இயற்கைப் பரிசோதனையையும் செயற்கைப் பரிசோதனையையும் வேறுபடுத்தி விளக்குக.

இ) அளவறிதலே விஞ்ஞானத்தின் பண்பாகும். ஆராய்க.

ஈ) எல்லா அளவீடுகளும் அண்ணளவானதே ஆராய்க.

விடை

இவ்வினாக்களுக்கு விடையளிக்கும் போது பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்க.

அ) இலட்சியப் பரிசோதனை என்பது பல மாறிகள் அல்லது காரணிகள் கொண்ட பரிசோதனையில் ஒரு நேரத்தில் ஒரு மாறியை அல்லது காரணியை மட்டும் மாற்றி பரிசோதிப்பதாகும் இதன் மூலமே உறுதியான முடிவை பெறமுடியும்.

உதாரணமாக வில்லியம் கார்வேயின் குருதிச் சுற்றோட்ட ஆய்வு பற்றிய பரிசோதனையை விளக்கிக் காட்டலாம்.

ஆ) இயற்கைப் பரிசோதனை என்பது தனித்து எளிய நோக்கல்என்றோ அல்லது தனித்து பரிசோதனை என்ற கொள்ளப்படாத ஒன்றாகும். இங்கு நோக்கல் பண்பும் பரிசோதனைப் பண்பும் காணப்படும். ஜெவன்ஸ் என்ற தத்துவ வாதியின் கருத்துப்படி எளிய நோக்கலில் இருந்து வரையறைப் பரிசோதனைக்குச் செல்லும் படிமுறையே இயற்கைப் பரிசோதனை ஆகும்.

இயற்கைப் பரிசோதனைக்கு உதாரணமாக வானியல் பற்றிய சில ஆய்வுகளை கூறலாம்.

இ] அளவீடுகள் என்பது எந்த ஒன்றினதும் பரவலை அல்லது நிறையினை எண் அளவுகளில் காட்டுவதாகும். விஞ்ஞானங்களில் பண்பு ரீதியான விடயங்களை எண்ணளவாகமாற்றுவதன்மூலமே செம்மையான, உறுதியான முடிவினைப் பெற முடிகிறது இதனால் அளவறிதல் விஞ்ஞான பண்பாக உள்ளது.

ஒவ்வொன்றினதும் வித்தியாசங்கள் வளர்ச்சிகளை மதிப்பிடவும் செயற்கையான ஒன்றை அமைத்துக் கொள்ளவும் அளவீடு உதவுகிறது.

உ+மாகஒரு மனிதனின்உடல் வெப்பத்தை வெப்பமானியை

வாய்ப்புஎன்ன எனக்கூறுவீர்.

ஆ) 1] 52 சீட்டுக்களைக் கொண்ட சீட்டுக் கட்டில் இருந்து பிரதிவைப்புடன் மூன்று சீட்டு எடுக்கப்படுகின்றன பின்வரும் நிகழ்தகவை கணிக்க.

[i] இரண்டாவது மாத்திரம் ஆடித்தன்

[ii] மூன்றும் ஒரே சீட்டுக்கள்

2) மூன்று தாயக்கட்டை ஒரு முறை எறியப்படுகின்றது எனின் பின்வரும் நிகழ்தகவை கணிக்குக.

[i] மூன்று தாயக்கட்டையிலும் இலக்கம் ஒன்று வருதல்

[ii] மொத்தம் 17 புள்ளிகள் வருதல்.

விடை

அ)i] பூச்சியநிகழ்தகவுஎன்பது என்றும் நிகழ முடியாத நிகழ்ச்சியாகும். (சூரியன் நாளை மேற்கே உதித்தல்) இன்னோர் வகையில் கூறின் ஒரு நிகழ்ச்சி நிகழ்வதற்கு சாதகமான காரணி எதுவும் இல்லாது எல்லாம் பாதமாக இருப்பின் அந்நிகழ்ச்சி பூச்சியம் ஆகும்.

உதாரணம்;

ஆறுபக்கம் கொண்ட தாயக்கட்டை எறியும் போது 7-ம் பக்கம் வருதல்

ஆனால் எப்போதும் நிகழக்கூடியது கட்டாய நிகழ்ச்சியாகும். (சூரியன் நாளை கிழக்கே உதிக்கும்) இன்னோர் வகையில் கூறின் ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதற்குபாதகமான காரணி எதுவும் இல்லாது எல்லாம் சாதகமாக இருத்தல் கட்டாய நிகழ்தகவு ஆகும் உ+மாக 52 சீட்டுக்களைக் கொண்ட சீட்டுக் கட்டுகளில் இருந்து ஒரு சீட்டு எடுக்கும் போது அது ஏதாவது ஒன்றாக இருத்தல்

$\frac{52}{52} = 1$ ஆகும்

2) சார்ந்த நிகழ்ச்சி என்பது ஒரு நிகழ்ச்சி நடைபெறுவது பிறிதொரு நிகழ்ச்யில் தங்கியிருப்பது அல்லது ஒரு நிகழ்ச்சி பிறிதொரு நிகழ்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துவதாகும்.

உ+மாக 52 சீட்டுகளில் இருந்து பிரதிவைப்பு இன்றி இரு சீட்டு உருவப்பட்டன. இதில் முதலாவது ஆடித்தன் வருதல் எனின் $\frac{13}{52}$ ஆகும்இரண்டாவதும் ஆடித்தன் வருதல் எனின் $\frac{12}{51}$ ஆகும். ஆகவேஇவை சார்ந்த நிகழ்ச்சி ஆகும்.

ஆனால் சாராத நிகழ்ச்சி என்பது ஒரு நிகழ்ச்சி பிறிதொன்றை பாதிக்காது அல்லது தாக்கத்தை ஏற்படுத்தாத நிகழ்வதாகும்.

உ+மாக ஒரு நாணயம்

விளக்குக

ஆ) போட்டி முறையில் உள்ள குறை நிறைகளை விளக்குக.

இ] சமூக விஞ்ஞான ஆய்வில் தனிவரலாற்று ஆய்வு முறையை விளக்குக.

ஈ] உளவியல் ஆய்வில் அகநோக்கு முறையின் பங்கை மதிப்பிடுக.

விடை

இவ்வினாக்களுக்கு விடையளிக்கும் போது பின்வரும் விடயங்கள் இடம்பெறுதல் வேண்டும்.

அ]

★ வினாக்கொத்து முறை பற்றி உதாரணத்துடன் விளக்க வேண்டும்.

★ சிறந்த வினாக்கொத்து முறைக்குரிய இலட்சணங்கள் எழுதப்பட வேண்டும்.

ஆ]

★ பேட்டிமுறையை உதாரணத்துடன் விளக்க வேண்டும்.

★ பேட்டிமுறையின் பயன்கள் சமூக விஞ்ஞான ஆய்வுடன் தொடர்புபடுத்தி விளக்க வேண்டும்.

★ பேட்டி முறையின் குறைபாட்டினை எழுத வேண்டும்.

இ]

★ தனி வரலாற்று ஆய்வு முறையை விளக்குதல்.

★ உளவியல் ஆய்வுகளில் இதன் முக்கியத்துவம்.

★ வைத்திய ஆய்வு முறையில் பொருத்தமான உ+ம் மூலம் விளக்குதல் வேண்டும்.

ஈ] அகநோக்கு முறை என்பது ஒருவர் தனது உள நடத்தையை உள்ளிருந்து நோக்குவதாகும். அதாவது தன்னைத்தான் ஆராய்வதாகும்.

உ+மாக ஒருவர் தனக்கு கோபம் வரும் போது தனது நடத்தை மாற்றங்களை அவதானிப்பதைக் கூறலாம். அகநோக்கு முறை பற்றிய உளவியலாளரின் விமர்சனம் இடம் பெற வேண்டும்.

வினா 2

அ] செம்மையான மாதிரியின் இலட்சணங்களை விளக்குக.

ஆ] புள்ளிவிபர வியலின் முதன்மைத் தரவையும் இரண்டாந் தரத் தரவையும் வேறுபடுத்தி விளக்குக.

இ] சராசரியில்இருந்து விலகலை கணிப்பிடும் முறைகளை விளக்குக.

ஈ] சுய தோல்வியுடைய எதிர்வு கூறல் என்றால் என்ன?

விடை

★ இவ்வினாக்களுக்கு பின்வரும் விடயங்கள் விடையில் இடம் பெற வேண்டும்.

அ] ★ மாதிரி என்றால் என்ன என்பதை உதாரணத்துடன் விளக்குதல்

★ மாதிரியின் இலட்சணம் குறிப்பாக சம

வினாவையேனும் தெரிவு செய்தல் வேண்டும். ஆக கூடுதலாக மூன்று வினாவையே தெரிவு செய்யலாம்.

இப்பகுதியில் இடம்பெறும் சிலவினாக்கள் பின்வருமாறு:

வினா 1

அ] விஞ்ஞானம், விஞ்ஞான முறை என்பவற்றில் இருந்து நீர் விளங்கிக் கொள்வதென்ன?

ஆ] விஞ்ஞான அறிவைப் பெறுகின்ற பிரதான முறைகள் இரண்டையும் விளக்குக.

இ] விஞ்ஞான கண்டுபிடிப்பையும் புதிது புனைதலையும் வேறுபடுத்தி விளக்குக.

ஈ] விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள்பிரச்சினைகளில் இருந்தே ஆரம்பிக்கின்றன என்ற கருத்தை உதாரணத்துடன் விளக்குக.

விடை

அ] விஞ்ஞானம் பரந்தவிடயமாக இருப்பதால் தனித்து ஒரு வரையறையில் கூறிவிட முடியாது. எனினும் பொதுவாக நோக்கின் ஒழுங்குபடுத்தப்பட்டதிருத்தமான, திருப்திகரமான அறிவு விஞ்ஞானம் ஆகும். இன்னொரு வகையில்கூறின் காரணகாரிய தொடர்புபடுத்தி தர்க்க ரீதியாக ஆராய்ந்து பெறப்பட்ட அறிவு விஞ்ஞானம் ஆகும்.

ஆனால், விஞ்ஞான முறை என்பது விஞ்ஞான அறிவினை தர்க்கிக்க பயன்படுத்தும் நியாயித்தல் முறைகள் ஆகும்; அதாவது, விஞ்ஞான அறிவாகிய விதிகளுக்கும், கொள்கைகளுக்கும் காரணம் காட்டமுற்படுகின்ற முறைகள் விஞ்ஞான முறைகள் எனப்படும். இவை விஞ்ஞானங்களுக்கு ஏற்ப அமைந்திருப்பதைக் காணலாம். குறிப்பாக சிந்தனை முறை, அவதான, பரிசோதனை முறை மற்றும் புள்ளி விபர முறை போன்றதானவற்றைக் கூறலாம்.

ஆ] அறிவாராய்ச்சியியலில் பயன்படுகின்ற சிந்தனை முறையும் புலன் அனுபவ முறையும் இங்கு பிரதான இரு முறைகள் ஆகும். இங்கு சிந்தனை முறை என்பது உய்த்தறி ரீதியான முறையாகும்; இதன்படி அனுபவ உண்மை நோக்கப்படுவதில்லை. விஞ்

...ந்த பொருள் கீழ்நோக்கி விழுவது ஏன் என்ற பிரச்சினையில் இருந்து பெறப்பட்ட கண்டுபிடிப்பே புவியீர்ப்பு கண்டுபிடிப்பாகும்.

★ (இவைபோன்று ஏனைய வினாக்களுக்கு விடையளிக்கும் முறை இங்குதரப்படுகின்றது. அவற்றை கருத்தில் கொண்டுமாணவர்விடையளிக்க பழகுக)

வினா 2

அ) விஞ்ஞானத்தில் உய்த்தறி முறையும் தொகுத்தறி முறையும் எப்போதும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல. ஆராய்க.

ஆ) தொகுத்தறி முறையின் பிரச்சினையை தீர்ப்பதற்காக முன்வைக்கப்பட்ட இயற்கை ஓர்சீர்மைத் தத்துவம், காரணகாரியத் தத்துவம், வரையுள்ள வேறுபாட்டுத் தத்துவம் என்பவற்றை விளக்குக.

விடை

அ) இவ்வினாவுக்கான விடையில் பின்வரும் விடயங்கள் இடம்பெற வேண்டும்:

★ உய்த்தறி, தொகுத்தறி முறைக்கு இடையில் வேறுபாடுகளை உதாரணம் மூலம் காட்டி விளக்குதல்

★ ஒன்றின் தலைகீழ் மாற்றம் மற்றையது என விளக்குதல்

★ விஞ்ஞானத்தின் நோக்கத்தை குறிப்பிட்டு அதற்கு உய்த்தறி. தொகுத்தறி என்பவற்றின் அவசியத்தை விளக்குதல்,

★ விஞ்ஞான கண்டுபிடிப்பில் இருமுறையும் இணைந்து பயன்படுவதை உதாரணம் மூலம் காட்டுதல்.

★ உயிரியல் விஞ்ஞானம் அதிகளவு தொகுத்தறி முறையிலும் பௌதிக விஞ்ஞானம் அதிகளவு உய்த்யறி முறையிலும் வளர்ச்சிதடைந்தது என விளக்குதல்

ஆ)

★ தொகுத்தறி முறையில் முக்கிய பிரச்சினைகள் காட்டவேண்டும்

★ அவற்றை தீர்ப்பதற்கான ஆதாரவிதி பற்றிய விளக்கம்

★ இயற்கை ஓர்சீர்மை தத்துவத்தை விளக்கி அதில் எவ்வாறு தொகுத்தறி

ஆ)

★ விபரிப்பு விஞ்ஞானம் என்பது அவதானத்துக்குஉட்பட்ட தேர்வுகளை, அவதானத்துக்குட்பட்ட ஆதாரங்களை கொண்டு உள்ளதை உள்ளவாறு விளக்குவன

உ+ம் பௌதிக - உயிரியல் விஞ்ஞானங்கள்

★ சமூக விஞ்ஞானங்களிலும் விபரிப்பு தன்மைகள் உள

★ ஆனால் நியமம் கூறும் விஞ்ஞானம் என்பது சில விதிகளை குறிப்பிடுவதுடன் அவ்விதிகளின் கீழ் எப்படி அல்லது எவ்வாறு செயல்பட வேண்டும் என விளக்கும் விஞ்ஞானம்ஆகும். உ+மாக ஒழுக்கவியல், அழகியல் போன்றவற்றைக் கூறலாம்.

இ)

★) காள்பொப்பரின் கருத்தின்படி அனுபவச் சோதனைகளினால் பொய்யாக்க கூடியன விஞ்ஞானம் அனுபவச் சோதனையால் பொய்யாக்க முடியாதன விஞ்ஞானமல்லாதவை.

★ காள்பொப்பர் விஞ்ஞானம் பற்றி கூறிய பண்புகள்

★விஞ்ஞானம் அல்லாதவை தூயகணிதம் அளவையியல் போன்றன காரணம் இவை இவரது அனுபவ சோதனையில் பொய்யாக்க முடியாது.

★ இவரது கோட்பாடு பற்றிய விமர்சனம்.

வினா 4

அ) அவதானத்தை விட பரிசோதனை எப்போதும் சிறந்ததா என ஆராய்க

ஆ) அவதானத்தின்போதும் பரிசோதனையின் போதும் கருவிகள், பதிவுகள் என்பன பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

இ) நோக்கலில் ஏற்படும் போலிகளை விளக்குக.

விடை

★ இவ் வினாக்களுக்கு வீடை விடையளிக்கும் போது பின்வரும் விடயங்களை கருத்தில் கொண்டு விடை எழுதுக.

அ)

★ அவதான பரிசோதனை

இ) விஞ்ஞானத்தில் தீர்ப்புச் சோதனையின் பங்கை விளக்குக.

ஈ) மில்லின் எச்சமுறையை கூறி விளக்குக.

விடை

இவ்வினாக்களுக்கு பின்வரும் விடயங்களை கருத்தில் கொண்டு விடையளிக்க வேண்டும்.

அ) விஞ்ஞானத்தில் யாதேனும் ஓர் பிரச்சினையை தீர்ப்பதற்காக அல்லது நேர் வினா விளக்குவதற்காக கூறப்படும் தற்காலிக விளக்கம் அல்லது ஊகமாகவே கருதுகோள் அமைகிறது. ஏனெனில் ஆய்வாளனது மனதில் தோன்றும் கற்பிதமே கருதுகோள்கள்.

ஆனால் இக் கருதுகோள் வாய்ப்பு பார்க்கப்பட்டு அல்லது பரிசோதிக்கப்பட்டு பின் ஏற்றுக் கொள்ளப்படும் அல்லது நிராகரிக்கப்படும் உதாரனம் விளக்கம் இடம் பெற வேண்டும்,

ஆ)

★ பரிசோதித்து அறியக் கூடியதாக இருக்க வேண்டும்.

★ அதிகாரப் போலியற்ற முறையில் அமைய வேண்டும்.

★ தோற்றப்பாடுகளின் காரணங்களை விளக்குதல்

★ பிழைகளை ஏற்றுக் கொள்ளும் பண்பு

★ எளிமையான மொழியில் அமைதல்

★ ஏற்கனவே உள்ள இயற்கைவிதிகளுக்குமுரண்படாமல் அமைதல்.

(போன்றதான இலட்சியங்களை விளக்குதல் வேண்டும்)

இ)

★ தீர்ப்புச் சோதனை பற்றிய விளக்கம்

★ பொருத்தமான உதாரணம்

★ இங்கு தீர்ப்புச் சோதனையில் போட்டிக் கருது கோளில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கும் இரண்டும் ஏற்கப்பட்டதற்கும் உதாரணம் இருப்பது சிறந்தது.

ஈ)

★ மில்லின் பரிசோதனை

இதனால் அளவறிதல் விஞ்ஞான பண்பாக உள்ளது.

ஒவ்வொன்றினதும் வித்தியாசங்கள் வளர்ச்சிகளை மதிப்பிடவும் செயற்கையான ஒன்றை அமைத்துக் கொள்ளவும் அளவீடு உதவுகிறது.

உ+மாகஒரு மனிதனின்உடல் வெப்பத்தை வெப்பமானியை பயன் படுத்தி பாகையில் அளவிட்டு கூறுவதை குறிப்பிடலாம்.

ஈ) அளவிடலில் அளவு கருவியிலோ அல்லது அளவிடும் நபரினாலோ தவறுகள் ஏற்பட சந்தர்ப்பம் உள்ளதால் அளவுகள் 100% உண்மை என்பதற்கு இல்லை.மாறாக ஏறக்குறைய சரியானவை அல்லதுஅண்ணளவானவை என்றே கூற வேண்டும். ஒரு தடவை அளவீடு செய்தவற்றை மீள அளவிடும்போது வேறுபாடு தோன்றின் அதற்கு அளவுகள் அண்ணளவு என்பதையேகாட்டுகிறது.

இரு பொருட்களுக்கிடையில் அளவு கருவி எதையும் பயன்படுத்தி வித்தியாசத்தை அறிந்து கொள்ள முடியவில்லை எனின் அறியும் அளவீட்டின் குறைபாட்டை சுட்டுவதாகும்.

வினா 7

(அ)

(1) பூச்சிய நிகழ்தகவையும் கட்டாய நிகழ்தகவையும் வேறுபடுத்தி விளக்குக.

(2) சார்ந்த நிகழ்ச்சியையும் சாராத நிகழ்ச்சியையும் வேறுபடுத்துக.

(3) ஒரு நாணயம் 25 தடவை சுண்டும் போது 25 தடவையும் தலை மேல் வந்தது. அந் நாணயம் அடுத்து ஒரு முறை சுண்டும்போது தலை வரும் வாய்ப்பு என்ன?

[4] அந்த அரசியல் வாதி தேர்தலில் ஒன்றில் வெற்றி பெறுவான் அல்லது வெற்றிபெற மாட்டான் ஆகவே அவ் அரசியல்வாதி தேர்தலில் வெற்றி பெறும்

எனின் $\frac{\;}{51}$ ஆகும். ஆகவேஇவை சார்ந்த நிகழ்ச்சி ஆகும்.

ஆனால் சாராத நிகழ்ச்சி என்பது ஒரு நிகழ்ச்சி பிறிதொன்றை பாதிக்காது அல்லது தாக்கத்தை ஏற்படுத்தாத நிகழ்வதாகும்.

உ+மாக ஒரு நாணயம் சுண்டும் போது தலைவருதல் $\frac{1}{2}$ அதேவேளை தாயக்கட்டை எறியும் போது இலக்கம் ஒன்று வருதல் $\frac{1}{6}$. இதன்படி இவை சாராத நிகழ்ச்சியகும்.

3] $\frac{1}{2}$

4] இக்கூற்று அளவையியல் தர்க்கமே அன்றி நிகழ்தகவு ரீதியில் வாய்ப்பு கணிக்க முடியாது

ஆ) 1)

**S. சயந்தன் B.A. (Cey)**

ஆசிரியர், யா/மகாஜனாக் கல்லூரி

தெல்லிப்பழை

i] $\frac{39}{52} \times \frac{13}{52} \times \frac{39}{25}$

ii] $\frac{52}{52} \times \frac{1}{52} \times \frac{1}{52}$

2) i] $\frac{1}{216}$

(ii) $\frac{3}{216}$

[மாணவர்கள் பகுதி [II] இல் பிரிவு 1இல் இவை போன்ற விஞ்ஞான முறை தொடர்பான வினாக்களை கருத்தில் கொள்ள வேண்டும்]

## பகுதி [II]

★ இப்பகுதியில் புள்ளிவிபர ஆய்வுகணிப்பீட்டு முறை, சமூக விஞ்ஞானங்கள் தொடர்பான வினாக்கள் பொதுவாக இடம் பெறுவது வழமையாகும். இப்பகுதியிலும் மாணவர் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்தல் வேண்டும். இங்கு இடம் பெறும் சில வினாக்களை நோக்குவோம்:

வினா 1

அ] சிறந்த வினாக்கொத்து முறையின் பண்புகளை

விடை

★ இவ்வினாக்களுக்கு பின்வரும் விடயங்கள் விடையில் இடம் பெற வேண்டும்.

அ] ★ மாதிரி என்றால் என்ன என்பதை உதாரணத்துடன் விளக்குதல்

★ மாதிரியின் இலட்சணம் குறிப்பாக சமசந்தர்ப்பம் அளவுகள், ஆய்வு விடயத்துடனானமாதிரி, கணிப்பீட்டாளரின் கருத்துச் செல்வாக்கு இல்லாமை போன்ற விடயங்கள் இடம்பெற வேண்டும்.

ஆ] முதன்மைத்தரவு என்பது ஆய்வாளர் தனது ஆய்வுக்கு ஏற்ப அவதானம், விசாரணை, வினாக்கொத்து பரிசோதனை போன்றவற்றால் நேரடியாக பெறுவதாகும். இத்தரவு முதன்மை தரவை விட நம்பகமானது.

உ+மாக கருத்து கணிப்பை கூறலாம்.

ஆனால் பிறிதோர் ஆய்வுக்காக பெறப்பட்ட தரவை முழுமையாக அல்லது பகுதியாக பயன்படுத்தும் முறையே இரண்டாம் தரத் தரவாகும் இவை பொதுவாக ஏடுகள். அறிக்கைகள் என்பவற்றில் இருந்து பெறப்படுவன. இத்தரவுகள் முதன்மை தரவுடன் ஒப்பிடும் போது நம்பிக்கை குறைந்தன.

இ] சராசரியில் இருந்து விலகல் கணிப்பிடும் முறை,

1] நியமவிலகல்

2] பரப்பீடு

★ இவற்றைவிளக்கி பொருத்தமான உதாரணம் கொடுத்தல் வேண்டும்.

ஈ] எந்த ஒன்று பற்றியும் கூறப்பட்ட எதிர்வு கூறல் குறிப்பிட்ட நிலையில் தாக்கத்தைதரின்அல்லது எதிராகவரின்அது சுயதோல்வியுடைய எதிர்வுகூறல்ஆகும்இவ்எதிர்வு கூறல் சமூக விஞ்ஞானம் பற்றிய மனித நடத்தைகளில் அதிகம் பிரயோகிக்கப்படும். உ+மாக ஒரு மாணவர் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்வான் என எதிர்வு கூறியிருக்கும் போது பின் பரீட்சை முடிவு எதிராக வந்திருப்பின் அது சுய தோல்வியுடைய எதிர்வு கூறல் ஆகும்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அளவையியல்

வினா 3

அ) உளவியல்விஞ்ஞானமா என ஆராய்க.

ஆ) சமூக விஞ்ஞான ஆய்வில் பரிசோதனை மேற்கொள்ள முடியாமைக்கான காரணங்களை ஆராய்க.

இ) சமூக விஞ்ஞானங்களில் புறவயத் தன்மைகளை ஆராய்க.

ஈ) வரலாறு எந்த அளவுக்கு விஞ்ஞான இயல்புடையன என விளக்குக.

விடை

★ இவ் வினாக்களுக்கான விடையில் பின்வரும் விடயங்கள் இடம்பெற வேண்டும்

அ)

★ ஆரம்பகாலத்தில் உளவியல் விஞ்ஞானமாக கொள்ளப்படவில்லை என்ற கருத்து

★ குறிப்பாக 17ஆம் நூற்றாண்டின் பின் வோட்சன் போன்ற உளவியலாளரால் ஆய்வுகூடங்களை ஏற்படுத்தி உளவியல் ஆய்வுகள் மேற்கொண்டதால் மனித நடத்தையைப் பற்றிய விஞ்ஞான ஆய்வாக வளர்ந்தது.

★ உளவியலில் பலபிரிவு வளர்ந்ததும் கோட்பாடுகள் பெறப்பட்டதும் விஞ்ஞானத்தன்மையை காட்டுகிறது.

★ உளவியலில் உள்ள சமூக விஞ்ஞான பண்புகள் எழுதவேண்டும்

★ உளவியலில் உள்ள இயற்கை விஞ்ஞான பண்பு

★ உளவியலில் உள்ள பிரயோக பண்புகள்

(இவற்றில் தனித்தனிவினாக்கள் வருவதும் உண்டு)

ஆ)

★ சமூக விஞ்ஞானம் பற்றிய விளக்கம்

★ பரிசோதனை பற்றிய விளக்கம்

★ பரிசோதனை பயன்படுத்த முடியாமைக்கான காரணம் இங்கு பொதுவாக மனிதனை ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்த முடியாது, மனித நடத்தை மாறுபடும் இயல்பாகவே உணர்வுகள்உடையவன் என்ற விளக்கம்இடம்பெற வேண்டும்

இ)

★ புறவயத்தன்மை என்றால் என்ன என்பது பற்றிய விளக்கம்

★ புறவயத் தன்மை அனுபவ சோதனையில் தங்கியுள்ளது

★ சமூக விஞ்ஞானங்களில் புறவயத்தன்மை இருக்கின்றது என்பதற்கு காரணம் காட்டி எழுத வேண்டும். குறிப்பாக புள்ளி விபரத்துடன் தொடர்புபடுத்தி விளக்குதல், ஆனால் சமூக விஞ்ஞானத்தில் அகப்பண்பு அதிகம் உள்ளது என்ற விளக்கமும் இடம் பெற வேண்டும்

ஈ)

★ வரலாறு என்றால் என்ன என்பது பற்றிய விளக்கம்

★ வரலாற்றை ஆய்வு செய்வதற்கான ஆதாரங்களைக்காட்டி விமர்சன ரீதியாக ஏனைய விஞ்ஞானத்துடன் தொடர்புபடுத்தி விடை இடம்பெறவேண்டும்.

விடை 4

அ] நோக்கு கொள்கை விளக்கம் என்றால் என்ன? இது காரணகாரிய விளக்கத்தில் இருந்து எவ்வாறு வேறுபடுத்துகிறது?

ஆ] சமூக விஞ்ஞானம் ஆய்வில் கட்டுப்பாட்டு குழு முறையை ஆராய்க.

இ] சமூகவிஞ்ஞானக்கோட்பாடுகள் எடுகோள்களில் அமைவதற்கான காரணங்களை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக

விடை

அ) நோக்கு கொள்கை விளக்கம் என்பது எதிர்கால நோக்கு அல்லது இலக்கினை கொண்டு நிகழ்காலத்தில் ஒரு செயல்பாட்டை விளக்குவதாகும் இதனை நோக்கவாதம் என்பன உதாரணமாக அவன் இன்று முயற்சியுடன் படிப்பது பல்கலைக் கழகம் செல்வதற்காகவே

இந்நோக்குகொள்கை காரணகாரிய வாதத்தில் இருந்து வேறுபட்டது ஏனெனில் காரணகாரியம் இலட்சியத்துடனான விளக்கம் அல்ல அது முற்கூற்று பண்பால்பிற்கூற்று பண்பை விளக்குவது. இங்கு அவன் முயற்சியுடன் படித்தால் பல்கலைக்கழகம் செல்வான் என்பது காரண காரிய விளக்கமாகும்

ஆ

★ கட்டுப்பாட்டு குழுமுறை என்றால் என்ன என விளக்கி உதாரணம் காட்டவேண்டும்

★ இம்முறை சமூக விஞ்ஞானத்தைவிட உயிரியல் விஞ்ஞானத்துக்கே அதிகப் பொருந்தும்

இ]

★ சமூக விஞ்ஞானம் மனித நடத்தை பற்றிய ஆய்வாகும் மனித நடத்தையை தீர்மானிக்கும் காரணிகள் பலவாகும் ஆகவே தான் சமூக விஞ்ஞான கோட்பாடு எடுகோளில் அமைகிறது

★ கேள்விக் கோட்பாடு நிரம்பல் கோட்பாடு போன்றவற்றை கூறி விளக்குதல்

★ இக் கோட்பாடுகள் எடுகோளில் அமைவதால் செம்மையான எதிர்வு கூறல்கள் பெற முடியாது என்ற விளக்கங்கள் இடம் பெற வேண்டும்.

வினா 5

அ] சமூக விஞ்ஞானங்களில் புள்ளி விபரவியலின் பங்கை ஆராய்க

ஆ] புள்ளி விபரமுறையில் ஏற்படும்குறைபாடுகளை விளக்குக

இ] பின்வரும் அனுமானங்கள்ஏற்கக் கூடியதா? அல்லவா? உமது விடைக்கான நியாயத்தைத் தருக.

1] உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் தனது நான்கு பாடங்களிலும் 200 புள்ளி பெற்றான் ஆகவே அவன் ஒவ்வொரு பாடத்திலும் 50 புள்ளி வீதம் பெற்றிருப்பான்.

2] சென்ற வருடம் ஐ தே. கட்சி 57 சதவீத வாக்குகளைப் பெற்றது ஆகவே இவ் வருடம் அக்கட்சி தோல்வியடைய வில்லை.

விடை

இவ் வினாக்களுக்கு பின்வரும் விடயங்களுடன் விடை இருத்தல் வேண்டும்.

அ]

★ வர்ணனைப் பயன்

★ விபரிப்பு பயன்

★ அனுமானப் பயன்

★ எதிர்வு கூறும் பயன்

★ மாதிரிகள் கோட்பாடுகள் அமைத்தல்

★ புறவயப் பண்புகளை அதிகரித்தல்

★ சமூக விஞ்ஞானதோற்றப்பாட்டின் காரண காரிய தொடர்பை கண்டறிதல்

போன்றன உ+ம் மூலம் காட்ட வேண்டும்.

ஆ)

★ மாதிரி ஆய்வில் உள்ள குறைபாடு

★ புள்ளிவிபர பொதுமையாக்க குறைபாடு

★ நிகழ்தகவானது

★ வெவ்வேறு கால புள்ளி விபரம் பற்றிய குறைபாடு

★ பொறுப்பற்ற வெறி ஆர்வமுடையவர்பெறும் தரவில் உள்ள குறைபாடு

★ புள்ளிவிபரங்களை தவறான வழியில்பயன்படுத்தும் போது உள்ள குறைபாடு

[போன்றன உதாரணத்துடன் இருக்கவேண்டும்]

இ)

1) இக் கூற்று ஏற்க முடியாது

ஏனெனில் இந்த சராசரிப் புள்ளியானது ஒவ்வொரு பாடத்திற்கும் பொருந்தும் என்றில்லை.

2) இக் கூற்று ஏற்க முடியாது

ஏனெனில் சென்ற வருடதரவை கொண்டு இவ் வருடம் தோல்வி அடைந்ததோ இல்லையோ என கூற முடியாது.

[இவை போன்றதான வினாக்களில் மாணவர் கவனம் செலுத்த வேண்டும்]

### பகுதி III

★ இப்பகுதியில் பொதுவாக விஞ்ஞானிகள், முறையியலாளர்கள், விஞ்ஞானவிதிக்கொள்கைகள் விஞ்ஞானம்தொடர்பானகட்டுரை வினா போன்றனஇடம் பெறுவதுண்டு இப்பகுதியிலும் மாணவர் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்தல் வேண்டும்,

இப்பகுதியில் சில வினாக்களை நோக்குவோம்.

வினா 1

பின்வருவோரில் இருவரில் முறையியலுக்கு ஆற்றிய பங்களிப்பை தருக.

[இவ்வினாப் பகுதியில் மாணவர் பின்வரும் முறையியலாளரை கூடிய கவனம் எடுக்க]

1) காள் பொப்பர்
2) ஐன்ரையின்
3) பிரான்சிஸ் பேக்கன்
4) ருடேல்ப் கார்னெப்
5) டேக்காட்
6) டேவிற் கியூம்
7) ஜே, எஸ். மில்
8) ஐசாக் நியூட்டன்
9) பேட்டன் றசல்
10) அரிஸ்ரேட்டில்
11) எர்னேஸ்ட் மாஹ
12) தோமஸ் கூன்

(இம்முறையியலாளர் விதி கொள்கையுடனும் ஒரு பகுயாக வரக்கூடியன)

★ இவற்றுக்கு விடையளிக்கும் போது பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்க.

★ நாடு, எத்துறையில் புகழ்பெற்றவர், முறையியலுக்கு ஆற்றிய பங்களிப்பு கண்டுபிடிப்பு நோபல்பரிசு பற்றிய விபரம்.

வினா 2

பின்வருவோரில் இருவர் விஞ்ஞானத்திற்கு ஆற்றிய பங்களிப்பு

[இப்பகுதியில் பலவிஞ்ஞானிகள் வர வாய்ப்பு உள்ளது இவ்வினா பகுதி வினா ஆகையால் குறிப்பாக பின்வருனவற்றை கருத்தில் கொண்டு மாணவர் இரு விஞ்ஞானியை தெரிவு செய்ய வாய்ப்பு இருக்கலாம்]

1. மைக்கல் பரடே
2, வில்லியம் கார்வே
3, சி. வி. இராமன்
4. இராமனுஜன்
5. ஜே. சி. போஸ்
6. காள் மாக்ஸ்
7. அலெக்சாந்தர் பிளமிங்
8. ஜே. பீ. வோட்சன்
6. ஜீன் பியாஜே
10. ஜோன் டோல்ரன்
11. சிக்மன் புறொயிட்
12. இலவோசியர்

(மாணவர்கள் இவற்றை கூடிய கவனம் செலுத்தும் அதேவேளை ஏனைய விஞ்ஞானிகளையும் கருத்தில் கொள்க]

★ இவற்றுக்கு விடையளிக்கும் போது நாடு. எத்துறையில் புகழ் பெற்றவர் கண்டு பிடிப்பு நோபல்பரிசு போன்றதானவை இடம் பெறவேண்டும் தேவையான இடத்து ஆண்டுகள் எழுதிக் கொள்க.

★ [இங்கு தரப்பட்ட இரு வினாக்களும் ஒரே வினாவில் கீழ் பகுதிகளாக இடம் பெறுவதுண்டு]

வினா 3

பின்வருவனவற்றுக்கு விளக்க குறிப்பு தருக. (இவ்வினா பிறிதொரு பகுதியுடனோ அல்லது தனித்தோ வருவதற்கு சந்தர்ப்பம் உள்ளது)

1] பரிணாமக் கொள்கை
2] புளோசித்தன் கொள்கை
3] **DNA** உம் **RNA** உம்
4] உயிரின் தோற்றம்
5] உலகின் தோற்றம்
6] கெயின்சியப் பொருளாதாரம்
7] சனத்தொகை கோட்பாடு
8] நடத்தை வாதம்
9] உளப் பகுப்பு கோட்பாடு
10] முழு நிலைக் காட்சிக் கொள்கை
11] மாக்சிசம்
12] ஞாயிற்றுத் தொகுதி

மாணவர் இவற்றைக் கவனிப்பதுடன் விஞ்ஞானத்தில் ஏனைய விதி கொள்கைகளையும் கவனித்துக் கொள்க)

★ இவற்றுக்கு விடை கூறும் போது அந்த அந்த கொள்கை யாரால் பெறப்பட்டது. அவற்றின் விளக்கம் போன்றதானவை இடம் பெற வேண்டும்.

வினா 4

★ பின்வருவனவற்றில் இரண்டைப் பற்றி கட்டுரை வரைக. [இப்பகுதியில் விஞ்ஞானத்துடன் தொடர்பு பட்ட விளக்க கட்டுரை வினா இடம் பெறுவதுண்டு

1. விண்வெளிப்பயணம்
2. சீன விஞ்ஞானம்
3. சுதேச விஞ்ஞானம்
4. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்
5. விஞ்ஞானமும் ஒழுக்கப் பிரச்சினையும்
6. விஞ்ஞானமும் மூன்றாம் உலக நாடுகளும்

இவை போன்ற விஞ்ஞானம் தொடர்புபட்ட வினாக்களை எதிர்பார்க்கலாம்.

இவற்றுக்கு விடை எழுதும் போது விஞ்ஞானம் பற்றிய குறை நிறைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

மேற்கூறப்பட்டன போன்ற வினாக்களில் வினாப்பத்திரத்தில்தரப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய மாணவர் ஐந்து வினாக்களை நன்கு திட்டமிட்டு தெரிவு செய்து விடையளிக்க முற்படுக இவ்வினாப் பத்திரத்திலும் பல தெரிவு வினாக்கள் இடம்பெறுவதால்

1-ம் ஆண்டுநினைவஞ்சலி



1-ம் ஆண்டுநினைவஞ்சலி





கடற்கரும்புலி

## கப்டன் மணியரசன்

(தேவநாயகம் இராசரூபன்)

மணற்காடு, குடத்தனை

பிறப்பு: 22 - 10 - 1977 வீரச்சாவு: 29 - 08 - 1993

ஆராத அன்போடு அளவளாவிக் களிக்கும்
அருந்தங்கை றசீமாவும் மண்முன் தூசென்று
டோறாவைத் தகர்த்தெறிந்து மாவீர னானாய்
மாறாத தமிழ்ப்பற்றுக் கொண்ட மணியரசா
ஓராண்டு முடிந்ததையா உன்வடிவம் கண்டு
உன்பெற்றோர் சகோதரங்கள் உருகிடினும் உந்தன்
பேராண்மை கண்டுலகம் பாராட்டும் போது
பெருமிதத்தில் மிதக்கின்றோம் பிறந்திடுநீ மீண்டும்.

29-08-94 இன்று மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் அத்தோடு நடை பெறும் விருந்து உபசாரத்திலும் அனைத்துப் போராளிகளையும், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்

(9227) தந்தை,தாய், சகோதர.சகோதரிகள்,அத்தான். அண்ணி,மருமக்கள்.



கடற்கரும்புலி

## மேஜர் புவீந்திரன்-புகழரசன்

(சுப்பிரமணியம் நாககீதன்)

பிறப்பு: 15 - 11 - 1974 வீரச்சாவு: 29 - 08 - 1993

தன்மானத் தமிழனாய் நாம் வாழ வேண்டுமென
தமிழர் படையான புலிப்படையில் தான் இணைந்து
எத்தனையோ மோதலில் எதிரியுடன் சமர்புரிந்தாய்
படுகாயம் அடைந்த நிலையிலும்
எதிரியை எதிர் கொண்டு அழித்திடுவேன் என்று
கடல் கரும்புலியாகி கொலைலப்படகான
சுப்பர் டோறாவை கடற் கரும்புலி மேஜர் புகழரசனும்
கடற் கரும்புலி கப்டன் மணியரசனும் சேர்ந்து அழித்த
செய்தி கேட்டு சிறிலங்கா அரசும் அரச படையும்
அதிர்ந்து போய் நின்றனவே.

29-8-94 இன்று நடக்கும் மதிய விருந்துபசாரத்தில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்களை கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.

90/7, சந்தோசம் வீதி,
(A.V றோட்) அரியாலை.

தந்தை: க. த. சுப்பிரமணியம் குடும்பத்தினர்
சிறிய தகப்பன் குடும்பத்தினர்
(9206)

6. விஞ்ஞானமும் மூன்றாம் உலக நாடுகளும் இவை போன்ற விஞ்ஞானம் தொடர்புபட்ட வினாக்களை எதிர்பார்க்கலாம்.

இவற்றுக்கு விடை எழுதும் போது விஞ்ஞானம் பற்றிய குறை நிறைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

மேற்கூறப்பட்டன போன்ற வினாக்களில் வினாப்பத்திரத்தில்தரப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையமாணவர் ஐந்து வினாக்களை நன்கு திட்டமிட்டு தெரிவு செய்து விடையளிக்க முற்படுக இவ்வினாப் பத்திரத்திலும் பல தெரிவு வினாக்கள் இடம்பெறுவதால் மாணவரின்வினாத்தெரிவிலே உங்கள் புள்ளிகள் தங்கி உள்ளன என்பதை மறந்துவிடாதீர்கள்.

குறிப்பு

27-8-94-ல்வெளியாகியபரீட்சை வழிகாட்டியில் சில வசனங்களில் தவறுகள் ஏற்பட்டுள்ளன. அதை கீழ்வருமாறு திருத்திக்கொள்க

1) வினா 6 இல் இ பகுதி
உ+ம் ]1] பின்வருமாறு அமையும்
எந்த பறவையும் கறுப்புஅல்ல
எல்லா காகமும் கறுப்பு
ஆகவே காகம் எதுவும் கறுப்பல்ல

2) வினா 7இல்
1-ம் உருவில்
**BARBARA**
**CELARENT**

வினா 11 பகுதி ஆ
உ+ம் 2 இன் விடையில் [சந்திரிகா) என்பதை அமெரிக்க ஜனாதிபதி என எழுதிக் கொள்க.

## அதிகாரிகள் இராஜினாமா

(கொழும்பு)

நான்கு அரசாங்க வங்கிகளின் பணிப்பாளர்களும், நிர்வாகசபை உறுப்பினர்களும் நேற்று முன்தினம் பதவிகளில் இருந்து இராஜினாமா செய்துள்ளனர் என பிரதமரும் நிதி அமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

இதே வேளை தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், மற்றும் தேசிய லொத்தர் சபை பணிப்பாளர்களும் தமது பதவியை இராஜினாமா செய்ததாக அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

சிந்தனைக்கு..

எரிகிறதைப் பிடுங்கினால்
கொதிக்கிறது அடங்கும்
- தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 29-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## ஐ. தே. கவின் ஊழல் சாம்ராஜ்யம்

அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பொது ஜன ஐக்கிய முன்னணியின் புதிய அமைச்சர்கள் பலரும், ஐ தே.கவின் கடந்த கால 17 வருட ஆட்சியில் செய்யப்பட்ட ஊழல், மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம் என்பனவற்றை தொடர்ச்சியாக அறிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ் ஊழல் மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் பற்றிய பட்டியல் எந்தளவிற்கு நீண்டு செல்லும் என்று தற்பொழுது கூறிவிட முடியாது; ஆனால் ஐ. தே. கவின் ஆட்சி தொடங்கிய காலத்தில்இருந்து ஆட்சி கை மாறும் வரை இது நீண்டுள்ளது என்பதை மட்டும் துணிந்து கூறலாம். ஏனெனில் இம்மோசடிகள், ஊழல்கள் குறித்து ஏற்கனவே பல தகவல்கள் வெளி வந்திருப்பினும் அவை ஆட்சியாளர்களால் திட்டமிட்டே மறைக்கப்பட்டன / கண்டு கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும்.

இந்த வகையில் ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் பெரும் மோசடிகள் முக்கிய தலைவர்கள் மீதும் சுமத்தப்பட்டிருந்தன. இதில் அன்று பெரும் பணம் புரண்ட மகாவலி அமைச்சிலும், கப்பல் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சிலும், வீடமைப்பு நிர்மாண அமைச்சிலும் மற்றும் பாதுகாப்பு அமைச்சிலும் பெரும் மோசடிகள் செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.

அன்றைய காணி- காணி அபிவிருத்தி மற்றும் மகாவலி அமைச்சரான காமினி திசாநாயக்காவே அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி பெருந்தொகை மகாவலி அபிவிருத்தி நிதியைக் கையாண்டதாக பலமான குற்றச்சாட்டு உள்ளதோடு, பெருமளவு ஊழல் மோசடியில் ஈடுபட்டதோடு, பல கோடிக் கணக்கான ரூபாக்களைச் சேர்த்துக் கொண்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

முதலில் கப்பல் போக்குவரத்து மற்றும் வர்த்தகத் துறை அமைச்சராகவும், பின்னர் தேசிய பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த லலித் அத்துலத் முதலியும், கப்பற் கொள்வனவிலும், பின்னர் ஆயுதக் கொள்வனவிலும், பெரும் தொகை பணத்தை சுருட்டிக்கொண்டதாகவும் பெரும் விமர்சனம் கடந்த காலத்தில் வைக்கப்பட்டது.

## பெண்களால் எமது மண்ணில் பலசாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன

### மகளிர்பிரிவு துணைப்பொறுப்பாளர் தமிழவள்

(யாழ்ப்பாணம்)

உலகம் முழுவதற்குமான முன்னுதாரணமாக எமது எழுச்சிப் போராட்டம் திகழ்கின்றது. பெண்களால் எமது மண்ணில் பல சாதனைகள் செய்யப்பட்டுள்ளன

மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் நடைபெற்ற கடற் கரும்புலி கப்டன் அங்கயற் கண்ணி நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது தமிழீழ மகளிர் பிரிவு துணைப் பொறுப்பாளர் தமிழவள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

எமது போராட்டத்தில் கரும்புலி வடிவமானது யாராலும் வெல்லமுடியாத ஒப்பற்ற உயர்ந்த வடிவமானது.

கறுப்பு முன்னர் சோகத்தின் அடையாளமாகவே கருதப்பட்டது. இன்று வெற்றிக்கும் தியாகத்திற்குமாக மாற்றமடைந்துள்ளது.

இனியும் ஏராளமான கறுப்புக் கொடிகள் இந்த மண்ணில் பறக்கும் என்றார்.

தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அங்கு உரையாற்றும் போது,

எமது போராட்டம் பற்றியும் போராளிகளின் அர்ப்பணிப்பு பற்றியும் மக்களின் போராட்ட வாழ்வு பற்றியும் உலக சமூக விஞ்ஞானிகள் ஆராயத் தக்கதாகவும் எமது விடுதலைப் போராட்டம் அமைந்துள்ளது.

இப்போராட்டம் மூலம் தேசிய விடுதலையுடன் சமூக விடுதலையும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

கடற் புலிகள் குறுகிய காலத்தில் பெரிய சாதனையைப் படைத்துள்ளனர் என்றார்.

இக்கூட்டத்தில், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், செஞ்சோலை பொறுப்பாளர் செல்வி ஜனனி ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்கள் (தி) (சி)

## தெல்லிப்பழையில்கைதான 2பேர்காங்கேசனில்விடுதலை

தெல்லிப்பழையில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இருவர் கடந்த வியாழன் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

செல்லத்துரை- குணரட்ணராசா(37),கந்தையா கருணேந்திரன்(44)ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர். இவர்கள் இம்மாதம் 9ஆம் திகதி படையினரால் பிடித்துச் செல்லப்பட்டவர்கள். (யோ)

## இனம் தெரியாதோர் அச்சுறுத்தலால் மலையக தொழிலாளர் இடம்பெயர்வு

(மாத்தளை)

மாத்தளையிலுள்ள தோட்டப் பகுதிக்கு சென்ற ஒரு கோஷ்டியினர் அப்பகுதி மக்கள் மீது விடுத்த அச்சுறுத்தலை அடுத்து அங்கிருந்து இடம் பெயர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் அருகிலுள்ள காட்டுப்பகுதியில் மறைந்து வாழ்கின்றனர் இவர்கள் இரவு பகலாக உணவு, மற்றும் நீர் இன்றி அவதியுறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இத் தோட்டப் பகுதிக்கு கடந்த வியாழக்கிழமை சென்ற கோஷ்டி ஒன்று அன்று இரவு பத்து மணிக்கு முன்னதாக அவர்கள் தங்கி வாழும் கம்பிறாவை விட்டு வெளியேறிவிட வேண்டும் என கூறித் துப்பாக்கிப்பிரயோகமும் செய்துள்ளனர். இத் துப்பாக்கி சூட்டின் போது தொழிலாளி ஒருவர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பத்தை அடுத்து அங்கிருந்தவர்கள் அச்சம் காரணமாக உடைமைகளைக் கைவிட்டு அருகிலுள்ள காட்டுக்குள் ஓடிமறைந்து கொண்டனர்.

## ஊழல் அதிகாரிகளை புதிய அரசு நீக்காதது ஏன்?

### விக்டர் ஐவன் கேள்வி

(கொழும்பு)

சென்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தோல்வி அடைந்ததற்குக் காரணம் ஊழல்கள் எனவே ஆட்சி மாற்றம் ஏற்பட்ட சூழ்நிலையில் இதற்கு உதவி செய்த அதிகாரிகள் தொடர்ந்து அதே பதவி வகிக்கின்றனர், இதன் நோக்கம் மீண்டும் ஊழல் கொண்ட அரசை நடத்துவதா? என ராவய ஆசிரியர்விக்டர் ஐவன் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னைய அரசாங்க அமைச்சர்களுக்கு ஊழல் செய்வதற்கு வழிவகுத்து பூரண ஒத்துழைப்பை நல்கிய அதிகாரிகளை தொடர்ந்து அதேஇடங்களில் வைத்துக்கொண்டு இவ் அரசாங்கம்எவ்வாறு ஊழலை ஒழிக்கப்போகிறது என அவர் மேலும் கேள்வி எழுப்பப்பட்ட போதும் அமைச்சின் செயலாளர்களில் அனேகர் முன்னர் வகித்த அதே பதவியைவகித்துவருகின்றனர் என்றும் இதனால் இச்சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொருண்மியக் கலைநிகழ்வு

நல்லூர் பொருண்மியக் கண்காட்சியை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் பொருண்மிய மேம்பாட்டைச் சித்திரிக்கும் பல கலை நிகழ்வுகள் தினந்தோறும் நடைபெற்று வருகின்றன.

இதற்கென குளத்தினுள் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் தினந்தோறும் மாலை 6.00 மணி தொடக்கம் கூத்து, பொம்மலாட்டம், நடனம், நாடகம், வீடியோப் படக்காட்சி போன்ற கலை நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

## நிர்வாகசேவை பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சையும் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கானபரீட்சையும் பிற்போடப் பட்டுள்ளன.

...டுப்படுத்தப்பட்ட பரீட்சை 22-10-94ஆம் திகதி கொழும்பில் நடைபெறும், சிற்றூழியர்களை லிகிதர்களாக பதவி உயர்வுதொடர்பான பரீட்சை 30-09-94ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என யாழ் மாவட்ட அரச

## சட்டத்தரணி வீட்டிற்கு கைக்குண்டு வீச்சு

(மாத்தளை)

மாத்தளை இலந்தக்குளம் பகுதியில் உள்ள வழக்கறிஞர் ஒருவரின் வீட்டிற்கு கடந்த வியாழன் இரவு இனந்தெரியாதோரால் கைக்குண்டு வீசப்பட்டதனால் வீடு சேதத்திற்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட வழக்கறிஞர் சம்பவம் இடம்பெற்ற அன்று காலை மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் இடம் பெற்ற வழக்கு ஒன்றில் அரசியல் கட்சியின் சார்பில் ஆஜர் ஆனார் எனத் தெரியவருகிறது. இது குறித்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ராணுவ காவலரண்மீது மோட்டார் தாக்குதல்

### அதிகாரி உட்பட இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா ஓயாக் சின்னக்குளம் பகுதியில் கடந்த செவ்வாய் இடம்பெற்ற படையினர் மீதான மோட்டார் குண்டுத் தாக்குதலில் உயர் அதிகாரி உட்பட இரு படையினர் படுகாயமடைந்ததாக கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த இரு இராணுவத்தினரும் அனுராதபுரம் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்குட்படுத்தப் பட்டுள்ளனர். இவர்களில் கப்டன் தரத்தைச் சேர்ந்த ஒருவரது இரு கால்களும் அகற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## சஞ்சிகை கண்காட்சி

ஈழத்தில் வெளியாகும் சஞ்சிகைகளுக்கென தனியான கண்காட்சி - விற்பனவுக் கூடம் நல்லூரில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகைகளை வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதன் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கண்காட்சியில் இப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை சஞ்சிகைகளை அனுப்பாதவர்கள் அவற்றைக் காட்சிக் கூடத்திற்கு அல்லது கந்தர்மடத்தில் அமைந்துள்ள 'நங்கூரம்' அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும் படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

## சிறிலங்கா விளையாட்டு வீரர் கனடாவில் மர்ம மறைவு

(லண்டன்)

பொதுநல நாடுகளின் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளச் சென்ற சிறிலங்காவைச் சேர்ந்த ஏழு விளையாட்டுவீரர்கள் காணாமல் போயுள்ளனர்.

கனடால் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள சென்ற இவர்...

...அசோக குலரத்தினவும் உள்ளடங்குவார் எனவும் தெரிய வந்துள்ளது.

## காயம்

(யாழ்ப்பாணம்)

பனைமரத்தில் இருந்து தவறி விழுந்ததனால் இளம குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்

துறை அமைச்சராகவும், பின்னர் தேசிய பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த லலித் அத்துலத் முதலியும், கப்பற் கொள்வனவிலும், பின்னர் ஆயுதக் கொள்வனவிலும், பெரும் தொகை பணத்தை சுருட்டிக்கொண்டதாகவும் பெரும் விமர்சனம் கடந்த காலத்தில் வைக்கப்பட்டது.

ஆனால் பிரதமராகவும், வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் இருந்த ஆர். பிரேமதாசாவின் ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் பற்றிய தகவல்கள் எவ்வாறு விரிந்து செல்லக்கூடியது, பரந்து செல்லக்கூடியது என்பதை தற்பொழுது வரையறை எவரும் செய்வது கடினமானதாகவே இருக்கும். ஆனால் இவரது ஆட்சிக்காலத்திலேயே இவை உச்சகட்டத்திற்கு வந்ததோடு, அதிகாரிகள் மட்டத்திலும் பெருமளவில் பரவியது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

இதன் பின்னர் வந்த ஜனாதிபதி டி.பி. காலத்தில் பெரும்பாலும் சகலரும் தமக்கு வசதிப்பட்டது போல் மோசடிகளில் ஈடுபட்டுப் பொருள்தேடிக் கொண்டனர். ஆயுதக்கொள்வனவு, வெளிநாட்டு ஒப்பந்தங்கள் போன்றவற்றில் பல கோடிக்கணக்கான அரசாங்கப்பணம் வீண்விரயம் செய்யப்பட்டன. இதில் கைமாறிய தொகைகள் பல நூறு கோடி ரூபாக்கள் என்பது தற்பொழுது தெளிவாக அறிய முடிகின்றது.

இந்நிலையில்தான் ஊழல் மோசடிக்குப்பெரும் வாய்ப்பாக அமைந்த யுத்தத்தை நிறுத்துவதையோ சமாதானத் தீர்வொன்றைக் காண்பதையோ அரசியல்வாதிகள் சரி, அதிகாரிகளும் சரி விரும்பவில்லை. யுத்தம் அவர்களுக்கு தினமும் பொன் முட்டையிடும் வாத்தாகவே இருந்தது. சமாதானத்தின் மூலம் அவ் வாத்தைக் கொல்லும் முட்டாள் தனமான செய்கைக்கு எவரும் தயாராக இருக்கவில்லை.

இந்நிலையில் தான் பதவிக்கு வந்த புதிய அரசு ஊழல் மோசடிகள் பற்றி விசாரிக்கத் தொடங்கியுள்ளது. இது குறித்த நீதி அமைச்சரின் அறிவிப்புக்களும் மிகவும் கடினமானதாகவே உள்ளது. ஊழல் மோசடி நிருபிக்கப்படின் சொத்துக்கள்- உள்நாட்டில் இருப்பினும் வெளிநாட்டில் இருப்பினும்- பறிமுதல் செய்யப்படும் என ஏற்கனவே எச்சரித்துள்ளார். இதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படுமானால், பலர் தலையில் துண்டைப் போட வேண்டி வருவதோடு, சில சமயம் கம்பி எண்ண வேண்டியும் வரலாம்.

ஆனால் இவை யாவற்றிற்கும் முக்கிய காரணமாக அமைந்தது யுத்தமே ஆகும். தொடராக யுத்தம் நடைபெறும் பகுதிகளில் இவ்வாறான பெரும் மோசடிகளுக்ும் வாய்ப்புக்கள் அதிகம் என்பதே வரலாறு கூறும் உண்மையாகும். இந்நிலையில் யுத்தமும் மோசடியும்- அதிகாரத் துஷ்பிரயோகமும் ஒன்றில் ஒன்று இணைந்தவை என்றே கூறலாம். இதில் யுத்தம் நின்றாலே ஏனையவை நிறுத்தப்படும் வாய்ப்பு உண்டு. அது இல்லாது போனால் பேரங்களுக்கும், ஊழல்களுக்கும் அது வாய்ப்பை வழங்கிக்கொண்டே இருக்கும்.

---

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சையும் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கானபரீட்சையும் பிற்போடப்பட்டுள்ளன.

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை 22-10-94ஆம் திகதி கொழும்பில் நடைபெறும், சிற்றூழியர்களை லிகிதர்களாக பதவி உயர்வுதொடர்பான பரீட்சை 30-09-94ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடையெறும் என யாழ் மாவட்ட அரச அதிபரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

---

...அரசாங்க அமைச்சர்களுக்கு ஊழல் செய்வதற்கு வழிவகுத்து பூரண ஒத்துழைப்பை நல்கிய அதிகாரிகளை தொடர்ந்து அதேஇடங்களில் வைத்துக்கொண்டு இவ் அரசாங்கம்எவ்வாறு ஊழலை ஒழிக்கப்போகிறது என அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

புதிய அமைச்சர்கள் நியமி...

---

பொதுநல நாடுகளின் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளச் சென்ற சிறிலங்காவைச் சேர்ந்த ஏழு விளையாட்டுவீரர்கள் காணாமல் போயுள்ளனர்.

கனடால் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள சென்ற இவர்கள் காணாமல் பானதாகவும் இதில் குத்துச்சண்டை வீரர்...

---

...அசோக குலரத்தினவும் உள்ளடங்குவார் எனவும் தெரிய வந்துள்ளது.

## காயம்

(யாழ்ப்பாணம்)

பனைமரத்தில் இருந்து தவறி விழுந்ததனால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். அரியாலைடயஸ் குடியிருப்பில் வசிக்கும் தீவகத்தைச்சேர்ந்த அருளப்பு றெஜி என்ற குடும்பஸ்தரே மேற்படி படுகாயம் அடைந்து தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (22)

## போராட்டத்தை தொடர பல்கலை. ஊழியர் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்கம் இன்றும் தொடர்ச்சியாக யாழ் பல்கலைக்கழகத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளது.

தாம் முன்வைத்த கோரிக்கையை பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்க மறுத்து வருவதைத் தொடர்ந்து தாம் இம் முடிவை எடுத்துள்ளதாகதெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் பட்சத்திலேயே தாம் போராட்டத்தை கைவிட முடியும் என ஊழியர் தொழிற்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (பா)

## நிதியமைச்சிலிருந்து 1300 கோடி ரூபா மாயம்

(கொழும்பு)

கடந்த மூன்று நாட்களிலும் நிதி, வர்த்தக அமைச்சுக்களில் தானும் வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்னாவும் கண்டு பிடித்துள்ள இரண்டு ஊழல் மோசடிகள் பற்றி பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க விரைவில் நாட்டு மக்களுக்கு விளக்கிக் கூறுவார் என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் 1300 கோடி ரூபா காணாமல் போயிருப்பது குறித்து பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க கண்டுபிடித்து கடந்த புதன்கிழமை நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் அறிவித்திருந்தார் என்றும் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

## எறிகணை வீச்சு

(குருநகர்)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

# பொலிஸ் அதிகாரிகள்மீது குற்றச்சாட்டு விசாரிக்க பாதுகாப்பு அமைச்சு முடிவு

(கொழும்பு)

தேர்தல் காலப் பகுதியில் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக கூறப்பட்ட குற்றச் சாட்டுகளை உத்தியோகபூர்வமாக விசாரிக்க சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து ஆகஸ்ட் 16ஆம் திகதிவரை நடைபெற்ற சம்பவங்கள் பற்றியதாக இந்த முறைப்பாடுகள் அமையவேண்டும் என அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

பூர்வாங்க விசாரணைக்கென பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக எழுத்துமூல முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபின் விசாரணைகள் நடத்தப்படும். இது குறித்த முறைப்பாடுகள் அடுத்த மாதம் ஐந்தாம் திகதிவரை பாதுகாப்பு அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது

## விபத்தில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று ஞாயிறு காலை 8-00 மணியளவில் நாவற்குழி சந்தியில் மோட்டார்சைக்கிளும் சைக்கிளும் மோதிக்கொண்ட விபத்தில் சைக்கிளில் வந்த மூன்று இளைஞர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். சாவகச்சேரியைச் சேர்ந்த சிவதர்சன், பொட்டு, சாமி ஆகிய மூவரும் நல்லூருக்குச் செல்வதற்காக வந்து கொண்டிருந்த போதே இவ்வாறு விபத்தில் சிக்கினர். (22)

## கத்திவெட்டு

(யாழ்ப்பாணம்)

கொடுக்கல் வாங்கல் பிரச்சினை காரணமாக ஒருவர் கத்தி வெட்டுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எம். உதயகுமார் (வயது 24) என்பவரே வெட்டுக் காயத்திற்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

மேற்படி சம்பவம் நேற்று மல்லாகம் பகுதியில் இடம் பெற்றுள்ளது. (88)

## பிரதேச செயலகம் இடமாற்றம்

(கொழும்புத்துறை)

சங்கானை மக்கள் வங்கிக் கட்டடத்தில் இது வரை காலமும் இயங்கி வந்த சங்கானை பிரதேச செயலகம் பணிமனை எதிர் வரும் 31ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் சங்கானை மின் தறி ஆலைக் கட்டடத்தில் செயற்படவுள்ளது. (24)

## மாத்தளையில் அசிற் வீச்சு இருவர் பார்வை இழப்பு

(மாத்தளை)

மாத்தளைப் பகுதியில் கடந்த வியாழன் இரவு இனந்தெரியாதோரின் அசிற் வீச்சுக்கு இலக்கான நால்வர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் தமது கண் பார்வையை இழந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக முன்னாள் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். மேலும் இருவர் தேடப்படுகின்றனர்.

இதே வேளை பல்வேறு குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டு மாத்தளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட மாத்தளை பிரதேச சபை உறுப்பினருக்கு ஆறாயிரம் ரூபா அபராதமும் மாத்தளை பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

## கல்முனைப் பகுதியில் குண்டுவெடிப்பு சம்பவம்

கல்முனைப் பகுதியிலுள்ள முஸ்லிம் கிராமத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்பைத் தொடர்ந்து பெரும் பரபரப்பு ஏற்பட்ட போதிலும் எவரும் காயமடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது பகுதியில் தொடர்ச்சியான மூன்று குண்டுவெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றன.

கடந்த வியாழன் இரவு வாழைச்சேனையில் நடந்த கட்சிக்கூட்டம் ஒன்றிற்கு இனம்தெரியாதோரால் குண்டு வீசப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**தனியார் கல்விநிறுவன ஒன்றியம்**
யாழ். மாவட்டம்

**பொதுச்சபைக் கூட்டம்**

இடம்: புதிய விஞ்ஞான கல்வி நிலையம்
(எழிலகம் முன்பாக)

காலம்: 31-08-1994 புதன்காலை 9.00 மணி

இக்கூட்டத்திற்கு பிரதி நிதிகளை அனுப்புவதை தவிர்த்து அனைத்து உறுப்பினர்களும் தாமே தவறாது கலந்து கொள்ளவும்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி-10199) 94 - 08 - 28



**நெஞ்சத்தில் நீங்காத ஈராண்டு நினைவலைகள்**



(29-08-1992 அன்று மானிப்பாயில் எதிர்பாராத விதமாக படுகொலை செய்யப்பட்டார்)

செல்வன்

**பாக்கியதுரை உதயகுமார்**

தோற்றம்: 30 - 06 - 1970 மறைவு: 29 - 08 - 1992

எண்ணம் எல்லாம் நிறைந்து
ஆண்டுகள் இரண்டு போனாலும்
மீண்டும் மீண்டும் மனக்கண்ணில்
உன் உருவம் தோன்றுதடா - உதயா!
சாவு என்ற ஒரு சொல்லில்
உன்னைத் தொலைத்து விட்டு
காலமெல்லாம் கண்ணீரில் கரைகின்றோம்
எம் இருப்பின் இறுதிவரை - நின்
நினைவுகள் நிலைத்திருக்கும்,
ஓம் சாந்தி.

இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கட்டுடை, என்றும் நின் பிரிவால் துயருறும்


### ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க

# ஐ. தே. க.வின் ஆதரவை பொ. ஐ. மு. கோருகிறது

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியைக் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டுமானால் அதற்கான அரசியலமைப்பு திருத்தத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் வேண்டும்.

இத்தகைய அரசியலமைப்பு சட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஐ. தே. கட்சியின் ஆதரவைக் கோரியுள்ளது. இக் கட்சியின் ஒரு சாரார் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு ஆதரவாக இருக்கின்றனர். மறு சாரார் ஜனாதிபதி ஆட்சி முறைக்கு ஆதரவாக இருந்து வருகின்றனர். இது தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர் காமினி திசாநாயக்காவிடம் கேட்டபோது எம்மில் சிலர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு ஆதரவாக இருக்கின்றனர். எனினும் இது தொடர்பான திட்டவட்டமான முடிவு எதையும் எடுக்கவில்லை எனவும் பதிலளித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரைக் கேட்டபோது இது சிறுபான்மையினர் குறிப்பாக தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரை மிகவும் சிக்கலான ஒன்று என்பதுடன் முக்கியத்துவம் வாய்ந்தததொன்று என்றனர். இது குறித்து தமது கட்சி முடிவெடுத்த பின்னரே எதுவும் கூற முடியும் என்றனர்.

இதே வேளை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருந்தால் போதும் என சில அரசியல் நிபுணர்கள் கருதுகின்ற போதிலும் வேறு சில நிபுணர்கள் இப் பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட்டே ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

### பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு

## டி. பியின் ஆதரவை எதிர்பார்க்கிறார் காமினி

ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்கி பாராளுமன்றத்தின் கீழ் அதிகாரம் கொண்டு வரப்படும் வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சி முறைக்கு தற்போதைய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவும் ஆதரவு வழங்குவார் என்று எதிர்பார்ப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் அரசியல் அமைப்பை மாற்றுவது தொடர்பாக ஐ. தே. கவினுள் முதன் முதலில் பிரகடனப்படுத்தியவர் டி. பி. விஜேதுங்காதான் எனவும் குறிப்பிட்டார்.

## மாகாண உறுப்பினராக தேவராஜ் நியமனம்

(கண்டி)

மத்தியமாகாணசபையிலும் சப்ரகமுவா மாகாண சபையிலும் இ.தொ கா.வில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மத்திய மாகாண சபையில் நுவரெலியா மாவட்டத்திற்கு முன்னாள் இந்து கலாசாரராஜாங்க அமைச்சர் தேவராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். மத்தியமாகாணசபையில்இ தொகா உறுப்பினராகவும் அமைச்சராகவும் பதவி வகித்தசதாசிவம் அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றியீட்டியதால் இவ்வெற்றிடம் ஏற்பட்டது

மத்திய மாகாண சபையில் கண்டி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இ.தொ.கா உறுப்பினர். நாவரசன் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இவரது இடத்திற்கு கண்டி மாநகரசபை உறுப்பினரான நவநீதராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

**சிசிலின்**

சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இவர் பாதுகாப்புக் காரணங்களுக்காகவோ அல்லது விசேட அழைப்பின் பெயரிலோ அழைக்கப்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை இராணுவ உயர் அதிகாரிகள் சிலரும். இராணுவத்திலிருந்து விலக்கப்பட்ட சிலரும் முன்னாள் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவை இரகசியமாகச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர். இந்த இராணுவ அதிகாரிகள் தேர்தலுக்கு முன்பாகவே கொழும்புக்கு வெளியே அவசரம் அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டனர், இவர்களது சந்திப்புகள் தொடர்பாக விசாரணைகள் நடத்த

**காலியான**

ளப்பட்டஒப்பந்தங்கள்தொடர்பாக மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த இவ் ஒப்பந்தங்களை செய்து கொண்ட நிறுவனங்கள் முன்வர வேண்டும் என சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா அழைப்பு விடுத்துள்ளார்.

ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு முற்பணம் மட்டும் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களை தான் மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என தெரிவித்த அவர், இவ் ஒப்பந்தங்களுக்கு தேவையான முழுப் பணத்தையும் வழங்கக் கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை எனவும் கூறியுள்ளார்.

## இறுதிவீரவணக்ககூட்டமும் நினைவுக்கல் நாட்டலும்

பூநகரிப் பகுதியில் கடந்த 23-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் அன்பரசன் / குணசீலன் (மயில்வாகனம் சற்குணராசா, மட்டக்களப்பு) கப்டன் ஜெயக்காந்தன்/ஜீவக்குமார், (கோபாலபிள்ளை சுதாகரன், அம்பாறை) ஆகியோரின் வித்துடல்கள் கிடைக்கப் பெறாதமையால் இன்று காலை 9.00 மணிக்கு இவர்களின் திருவுருவப் படங்கள் முறையே தாவடி வடக்கு மாரிதோட்டத்திலுள்ள உறவினர் இல்லத்திலிருந்தும், யாழ். கோவில் வீதி மட்டு அம்பாறைபெற்றோர்தங்ககத்திலிருந்தும்சகல அணிவகுப்பு மரியாதைகளுடன் றீகன்நகர் மாவீரர் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மக்களின் இறுதி வீர வணக்கமும், இறுதி வீர வணக்கக் கூட்டமும் நிறைவுற மீண்டும் அணி வகுப்பு மரியாதைகளுடன்அங்கிருந்து நாவலர் வீதி வழியாக இலுப்பையடிச் சந்தியை அடைந்து பலாலி வீதி வழியாக கோண்டாவில் சந்தியூடாக இருபாலை வீதியால் சென்றுஇராசபாதையால்திரும்பி கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை அடைந்து அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கற்கள்நாட்டப்படும்.

மேலும் இதே மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் சேரன் (ஐயாத்தம்பி குமரேந்திரன், எழுதுமட்டுவாழ் வடக்கு.) லெப். புதியவன்/ரமேஸ் (கந்தசாமி முருகதாஸ், மீசாலை தெற்கு ) ஆகியோரின் வித்துடல்கள் கிடைக்கப் பெறாதமையால் இவர்களின் திருவுருவப் படங்கள் அவரவர்களின் இல்லங்களிலிருந்து இன்று பி.ப. 2.00 மணிக்கு சகல அணிவகுப்பு மரியாதைகளுடன் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மக்களின் இறுதி வீரவணக்கமும், இறுதிவீர வணக்கக் கூட்டமும் நிறைவுற அங்கிருந்து மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் கண்டி வீதி யூடாகக் கொடிகாமம் சந்தியை அடைந்து பருத்தித்துறை வீதி வழியாகக் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரர்களின் நினைவுக்கற்கள்நாட்டப்படும்

## எம்.பிகளுக்கு பாதுகாப்பு அமைச்சரின் முதல் ஒப்பம்

பாதுகாப்பு பிரதி அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், முதற் கடமையாக, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு தொடர்பான கடிதமொன்றில், சிறிலங்கா பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கையெழுத்திட்டார்.

இக்கடிதம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில், பாராளுமன்ற செயலாளருடாக, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.


**மாணவர் அரங்கு புதன் வரும்**

பரீட்சைகள் காரணமாக வெளிவந்த விசேட மாணவர் அரங்குகள் இன்றுடன் முடிவுறுகின்றன தொடர்ந்து அடுத்த புதன் கிழமை முதல் வாரம்தோறும் மாணவர் அரங்கு வெளிவரும் என்பதையும் அறியத்தருகின்றோம்.


**பாண்**

சேரி அங்கீகாரத்துடன் வர்த்தக வாணிப உணவுத்துறை அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரட்ண மேற்படி விலைக் குறைப்பை அமுல்செய்துள்ளார்.

பருப்பின் விலையும் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.


நகராட்சிமன்றம், பருத்தித்துறை
பதில் சுகாதாரத் தொழிலாளர்
பதில் வேலைப்பகுதித்
**தொழிலாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள்**

எம் இருப்பின் இறுதிவரை - நின்
நினைவுகள் நிலைத்திருக்கும்,

ஓம் சாந்தி.


இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கட்டுடை, என்றும் நின் பிரிவால் துயருறும்
மானிப்பாய். பெற்றோர், சகோதரர்கள்

(சி-10198)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
12-06-1974

தாயக மண்ணில்
30-07-1994

## லெப்டினன்ட் உலகப்பன்/சாம்ராஜ்
(ராசநாயகம் - யூட்ஸ் அன்ரனி)

அண்ணன் பெயரைச்சூடி அணியில் இணைந்தாய்
ஆற்றல்மிகு வீரனாய் படையில் திகழ்ந்தாய்
கண்ணெனவே தாயகத்தை காத்தே நின்றாய்
கயவர்களின் கதைமுடிக்க களங்கள் சென்றாய்
எண்ணமெல்லாம் எங்கள் மண்ணின் விடிவேயென்று
ஏந்தி நின்றாய் சுடுகலனை என்றும் கையில்
மண்ணிலே குருதிகொட்டி மகிழ்ந்தே வீழ்ந்தாய்
மைந்தா உன் மாண்பு கண்டோம் மறவோம்
என்றும்.

29-8-94 இன்று இவரது இல்லத்திற்கு வருகை தரும்படி அனைத்து போராளிகளையும் அழைக்கின்றோம்.

19, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்

(9223)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என தெரிவித்த அவர், இவ் ஒப்பந்தங்களுக்கு தேவையான முழுப் பணத்தையும் வழங்கக் கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை எனவும் கூறியுள்ளார்.

இவ் ஒப்பந்தங்கள் குறித்து தீவிரமாக ஆராயப்படவேண்டும் எனவும் தேவைக்கு ஏற்றவகையில் புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளலாம் எனவும் அவர் அந்நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளார்.

### நாளை

டைத் தளபதிகளுடனும் பொலிஸ்மா அதிபருடனும் நடத்தப்பட்டு வருகிறது வரும் புதன் கிழமைக்குள் இது குறித்து முடிவுக்கு வரமுடியும் என நான் நம்புகிறேன் என்றார்.

### அம்பாறை

வாங்க மதிப்பீடுகளை கல்முனை, அக்கரைப்பற்று பகுதிகளிலும் மேற்கொண்டனர். எனினும் ஒலுவில் பிரதேசமே தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

தைகள் நடத்தியுள்ளனர். இந்த இராணுவ அதிகாரிகள் தேர்தலுக்கு முன்பாகவே கொழும்புக்கு வெளியே அவசரம் அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டனர், இவர்களது சந்திப்புகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவுள்ளன எனவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் கூறியுள்ளது.

இதேவேளை சிசில் வைத்தியரட்ணாவின் கொழும்பு விஜயத்தையடுத்து இராணுவத் தலைமையில் மாற்றம் கொண்டுவரப்படலாம் எனச் செய்திகள் வெளிவந்ததும், திருமதி சிறிமாவோ இது தொடர்பாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு ஆட்சேபனை தெரிவித்து கடிதம் எழுதியிருந்ததும் தெரிந்ததே.

அத்துடன் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் சிசில் வைத்தியரட்ணா தனிப்பட்ட முறையில் விடுமுறையில் கொழும்பு வந்திருந்ததாக கூறியிருந்ததும் இங்குகுறிப்பிடத்தக்கதாகும்.

---

தொடர்ந்து இவரது இடத்திற்கு கண்டி மாநகரசபை உறுப்பினரான நவநீதராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

### வடக்கு

அவர் மேலும் கூறுகையில் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொலிசார் விடுவிக்கப்பட்டுவிடுவர். எனவே வடக்கு-கிழக்கு பிரச்சினையை தீர்ப்பதே எனது முதல் வேலை என்றார்.

### பொருளாதார

தார்.

இவ் இழுபறி நிலைதோன்றினால் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டினால் மட்டுமே பொருளாதாரத்தடையை நீக்கக்கூடிய நிலை ஏற்படும் என அவர் மேலும் கூறினார்.

---

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் ஆவணித் திங்கள் 15-ம் நாள் (31-08-1994) புதன்கிழமை முற்பகல் 9. 15 முதல் 11 - 07 மணிவரையான சுப முகூர்த்த வேளையில்

| | | |
|---|---|---|
| திரு. திருமதி நாகர் | ★ | திரு. திருமதி இராசதுரை |
| தம்பதிகளின் புதல்வன் | ★ | தம்பதிகளின் புதல்வி |
| திருநிறைச் செல்வன் | ★ | திருநிறைச் செல்வி |
| செல்வஞானம் (திரவியம்) | ★ | நாககாந்தி (வேவி) |
| அவர்களுக்கும் | ★ | அவர்களுக்கும் |

உடுவில் ஸ்ரீ பெரிய நாயகி அம்பாள் ஆலயத்தில் திருமணம் செய்து வைக்க இறையருள் கூடியிருப்பதால் அவ்வேளை தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்,

திரு. திருமதி நாகர்
மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

திரு, திருமதி இராசதுரை
நாகம்மாள் கோவில் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(9230)

---

நகராட்சிமன்றம், பருத்தித்துறை
பதில் சுகாதாரத் தொழிலாளர்
பதில் வேலைப்பகுதித்

# தொழிலாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள்

இந்நகராட்சி மன்றத்தில் மேற்படி பதவிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர், 18வயதுக்கும் 45வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். மலகூடச் சுத்திகரிப்பு வேலை செய்ய முன்வருபவர்களுக்கு, வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. எனினும் அவர்கள் 45 வயதுக்கு உட்பட்டவராயின் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு, தெரிவு செய்யப்படும் மலகூடச் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் அனைவருக்கும் இலவச வதிவிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பங்கள் 16-9-1994ஆம் திகதி பி ப 3.00 மணிக்கு முன்பு எனக்குக் கிடைக்கத்தக்கதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை, 25-8-1994

(சி-10197)

---

யாழ். ஸ்ரீதரில்

இன்று முதல்

தினசரி காலை 10.30 மணிக்கு மட்டும்

**BRUCELEE, CHUCK NORRIS**

நடித்த

# WAY OF THE DRAGON

கராட்டிப் படம்

தினசரி மாலை 4-00, 6-00 மணிக்கு

# CIRCUS

ஒரு சைக்கிளில் 20 பேர் பயணம்!
பந்தின்மேல் கரடியின் நடனம்!
உருளையின் மேல் யானையின் ஆட்டம்!
ஒட்டகத்தின் சாகசம்!
100 அடி உயரத்தில் இருந்து காருடன் பாயும் பெண்!
இவைகளைக்காண இன்றே வாருங்கள் ஸ்ரீதருக்கு!

(சி-10173)